வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 20.11.2021 சனிக்கிழமை | இதழ் : 350 | பக்கங்கள் : 16

## தமிழ் தேசியம் சார் விடயங்களில்

# ஆயர் மன்றம் சகல மதங்களுடனும் நெருங்கிய ஒத்துழைப்பை பேணும்

### நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள் அமைப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 20

தவறான புரிதல்களை தவிர்க்கும் முகமாக வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம் தமிழ்த் தேசியம் சார் விடயங்களில் வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய சமயத் தலைவர்களோடும் சிவில் சமூக அமைப்புக்களோடும் நெருக்கமான ஒத்துழைப்பை தொடர்ந்து பேணும் என்று எதிர்பார்ப்பதாக நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள் வடக்கு, கிழக்கு அமைப்பு தெரிவித்துள்ளது.

15

## மாவீரர் நாளை நினைவேந்துவதற்கு யாழ்., கிளிநொச்சி நீதிமன்றங்கள் தடை

யாழ்ப்பாணம், நவ. 20

மாவீரர் நாளை நினைவேந்துவதற்கு கிளிநொச்சி, யாழ்ப்பாணம் நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளை பிறப்பித்துள்ளன.

இதன்பிரகாரம், யாழ். பல்கலைக் கழக சூழலிலும், கோப்பாயில் முன்னர் துயிலும் இல்லம் இருந்த பகுதிகளிலும் நினை

15

## லண்டன் தீ விபத்தில் 4 ஈழத் தமிழர்கள் பலி!

லண்டன், நவ. 20

லண்டனின் தென் கிழக்கு பகுதியில் வியாழக் கிழமை இரவு இடம்பெற்ற தீ விபத்தில் இலங்கை தமிழ் குடும்பத்தை சேர்ந்த நால்வர் உயிரிழந்தனர். இளம் தாய் ஒருவர், அவரின் 4, ஒரு வயது பிள்ளைகள்,

15

## மற்றுமொரு டெல்டா திரிபு இலங்கையில்!

கொழும்பு, நவ. 20

இலங்கையில் மற்றுமொரு டெல்டா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல்துறை

15



குமாராலய தீபத் திருநாளான நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சொக்கப்பனை எரிப்பு இடம்பெற்றது. (படம் – ஐ. சிவசாந்தன்)

## யாழ். நகர பாடசாலையில் இருவருக்கு தொற்று

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். நகரின் பிரபல பாடசாலை ஒன்றில் இரு ஆசிரியர்களுக்கு கொரோனா

15

## எதிர்க்கட்சி எம்.பி.க்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உள்ளாக்குங்கள்

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்து

கொழும்பு, நவ. 20

மனோ கணேசனுக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளதால், எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கும் தொற்று ஏற்படலாம் என்றும் இதனால் அவர்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் அரசாங்க தரப்பு வலியுறுத்தியுள்ளது.

பாராளுமன்றத்தில் ஒழுங்குப் பிரச்

15

## நினைவுகூரும் நிகழ்வுகளை தடுத்தால் எமது மக்கள் வீறு கொண்டு எழுவார்கள்

### பாராளுமன்றத்தில் செல்வம் எம். பி.

கொழும்பு, நவ. 20

”போரில் உயிர்நீத்த தமது உறவுகளை நினைவுகூரும் நிகழ்வுகளை அரசு தடுக்க, தடுக்க எமது மக்கள் இன்னும் இன்னும் வீறு கொண்டு எழுவார்கள். இதனை நீங்கள் சாதாரணமாகவிட்டீர்கள்

15

## ஒற்றையாட்சி சிந்தனை தொடர்ந்தால் நாடு பூச்சியமாகவே மாற்றமடையும்

### மாற்று சிந்தனை வேண்டும் என்கிறார் கஜேந்திரகுமார்

கொழும்பு, நவ. 20

“இன்று புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இலங்கையில் முதலீடுகளை செய்ய தயாராகவே உள்ளன. அதனை சிந்தித்து சரியான மாற்று சிந்தனை உருவாகவில்லை என்றால், இலங்கையாக

15



## கூட்டமைப்பு, ஹக்கீம், ரிஷாட்டை இணைத்தே புதிய அரசியலமைப்பை தயாரிக்க வேண்டும்

### பாராளுமன்றில் குமார வெல்கம வலியுறுத்தல்

கொழும்பு. நவ. 20

அனைவரும் ஒன்றாக பயணிக்க வேண்டுமாயின் நாட்டுக்கு பொருத்தமான அரசியலமைப்பை அமைக்க வேண்டியது அவசியமாகும் என்றும், அதன்படி அரசியலமைப்பை

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# நல்லூர் ஆலய நிர்வாகி நினைவாக யாழ். மாநகர சபைக்கு செங்கோல்

யாழ்ப்பாணம், நவ. 20

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 10ஆவது நிர்வாகி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு செங்கோல் நேற்று வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது.

அண்மையில் குகபாதமடைந்த நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 10ஆவது நிர்வாகி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக நல்லூர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட செங்கோல் கையளிக்கப்பட்டது. யாழ்ப்பாண பண்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக இந்த செங்கோல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் சிவச்சாரிகளால் யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணனிடம் நல்லூர் ஆலயத்தில் வைத்து செங்கோல் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டது. (ஐ)



# அரசமைப்பை மீறி அமைச்சரவை; உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல்!

கொழும்பு, நவ. 20

நாட்டின் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை விட அமைச்சரவை அமைச்சர்கள் 2 பேரும், 4 இராஜாங்க அமைச்சர்களும் அதிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால், அரசமைப்பு மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடுமாறு கோரி பொறியியலாளர் கபில ரேணுக பெரேரா உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளார்.

20ஆவது அரசமைப்பு திருத்தத்திற்கு அமைய, 30 அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் 40 இராஜாங்க அமைச்சர்களை நியமிக்க முடியும் என வரையறை செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய செயல்படாத ஜனாதிபதி, அரசமைப்புக்கு அமைய செயல்படத் தவறியுள்ளார் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அரசமைப்பை பாதுகாத்து அதனை வலுப்படுத்த வேண்டியதன் பொறுப்பு, ஜனாதிபதியின் பிரதான கடமை எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சட்ட மா அதிபர், பிரதமர் தலைமையிலான அமைச்சரவை, இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதி செயலாளர் பி. பீ. ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல உள்ளிட்ட 82 பேர் மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ஐ)

# எரிவாயு தட்டுப்பாடு; 6 நாட்களில் தீர்வு

கொழும்பு, நவ. 20

சந்தையில் நிலவும் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டிற்கு இன்னும் 6 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் விநியோகம் மற்றும் வர்த்தக பணிப்பாளர் ஜானக பத்திரண தெரிவித்தார்.

கடந்த நாட்களில் சந்தைக்கு சுமார் 6 இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன. லாப்ஸ் ரக சமையல் எரிவாயு விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் சந்தையில் எரிவாயு சிலிண்டருக்கு பெரும் கேள்வி எழுந்துள்ளது.

லிட்ரோ நிறுவனம் வழமையான நாட்களை காட்டிலும் தற்போது சந்தைக்கு 25 சதவீத அளவில் சமையல் எரிவாயு சிலிண்டரை விநியோகித்துள்ளது. இந்த வாரம் சுமார் 8 இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)


## மரண அறிவித்தல்

பிறப்பு
22 - 11 - 1943



இறப்பு
19 - 11 - 2021

## வைத்தியநாதர் பசுபதிப்பிள்ளை

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும், கரம்பன் தெற்கு, இந்தியா தென்காசி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வைத்தியநாதர் பசுபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (19.11.2021)வெள்ளிக்கிழமை அன்று தென்காசி இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதர் – பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு – சோதியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திருமகள்(இந்தியா) அவர்களின் ஆருயிர்க் கணவரும், திருநயணி (கனடா), ஜெயந்தினி (கனடா), ஜெயநந்தினி (இந்தியா), கருணாகரன்(கனடா), திவாகரன், மாலினி(இந்தியா), சசிக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் நாகேஸ்வரி, புஸ்பமணி பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற திருமலர், சோதிநாதன் (இலங்கை), செல்வநாதன் (ஜேர்மனி), ஸ்ரீதரநாதன் (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருஸ்ணநாதன், இராமநாதன், உமாதேவி(இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,நந்துஷன், தனுஷன், துசாந்தன், பிரசாந்தினி, சிவயோகினி – பலமுகிலன், பிருந்தாயினி – முத்துராஜ், சொருபிணி, துவாரகன், சோபிகா, வேனுஜா ஸ்ரீ, வர்ஷ்சினி, மதுவர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும்,ருத்விகா, வர்ணசுதேகன், கிருத்வின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (19.11.2021) வெள்ளிக்கிழமை அன்று இந்தியாவில் உள்ள தென்காசியில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**கருணாகரன் - மகன்**
**Mobile : +16479944737**
**இராமநாதன் - மருமகன்**
**Mobile : +14164001891**
**கிருஷ்ணநாதன் - மருமகன்**
**Mobile : +16472864579**
**திவாகரன் - மகன்**
**Mobile : +918667745847**

தகவல்:
**குடும்பத்தினர்.**


## வடமாகாண மரநடுகை மாதம்
## 20 கார்த்திகை 2021

**“என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளை விடச் சிறந்தது எதுவுமில்லை”**
**- சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)**

### கல்வி TV CHANNEL-1 — 20.11.2021 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2 — 20.11.2021 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
20.11.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## கூட்டமைப்பினரின் அமெரிக்க சந்திப்பு!

சுமந்திரன் தலைமையில் சென்ற குழுவினரும், உலகத் தமிழர் பேரவை தலைமையிலான குழுவினரும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றனர். இது தொடர்பபான தகவல்கள், இராஜாங்கத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது. அந்தத் தகவல்களின்படி, குறித்த குழுவினர், இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் தொடர்பான விவகாரங்களைக் கையாளும் அலுவலகத்தின் அதிகாரிகளை சந்தித்திருக்கின்றனர். இதேபோன்று, இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான அலுவலக அதிகாரிகளையும் சந்தித்திருக்கின்றனர்.

இலங்கையின் சிறுபான்மை குழுக்களின் பாதுகாப்பு மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் அமெரிக்காவிற்கு முதன்மையானது - என, குறித்த சந்திப்பு தொடர்பான ருவிற்றர் பதிவில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில்தான் இந்த சந்திப்பு இடம்பெற்றிருந்தது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் இந்த சந்திப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை. வழமைபோல் அவர்களின் பங்குபற்றல் இன்றியே குறித்த நிபுணர் குழுவின் நியமனம் இடம்பெற்றிருந்தது. இதேபோன்று, புலம்பெயர் சூழலிலும் இந்த சந்திப்பு தொடர்பில் பலவாறான விமர்சனங்களும், அதிருப்திகளும் வெளியிடப்பட்டிருந்தன. இந்த சந்திப்பில் பங்குகொண்டிருந்த உலகத் தமிழர் பேரவை தொடர்பில் புலம்பெயர் சூழலில் கடுமையான விமர்சனங்கள் காணப்படுகின்றன.

உலகத் தமிழர் பேரவையென்னும் பெயரில் இயங்குபவர்கள் புலம்பெயர் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்ய முடியாது. அதற்கான தகுதிநிலையில் அவர்கள் இல்லையென்று அங்குள்ள பல குழுக்கள் விமர்சித்திருந்தன. எனினும், இந்த சந்திப்பில் உலகத் தமிழர் பேரவையே புலம்பெயர் சமூகத்தை பிரதிநித்துவம் செய்திருக்கின்றது. உலகத் தமிழர் பேரவையின் மூலோபாய இயக்குநரும் அதன் மூளையுமாக செயல்படும் சுரேன் சுரேந்திரன் கொரோனா தொற்று காரணமாக இறுதி நேரத்தில் இந்த சந்திப்பில் பங்குகொள்ளவில்லை. அவரின் பிரதிநிதிகள் பங்குகொண்டிருந்தனர்.

அமெரிக்காவின் புதிய நிர்வாகம் மீண்டும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து செயல்படுவதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது. மனித உரிமைகள் பேரவைக்கான புதிய பிரதிநிதியின் பெயரை அண்மையில் பைடன் பிரேரித்திருந்தார். இதேபோன்று இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதியை கையாளுவதற்கான புதிய தூதுவரையும் பைடன் அறிவித்திருந்தார். ஏற்கனவே, இது தொடர்பில் ‘ஈழநாடு’ சுட்டிக்காட்டியிருந்தது. குறித்த இரண்டு அலுவலக அதிகாரிகளையுமே கூட்டமைப்பின் தலைமையிலான தமிழ் பிரதிநிதிகள் சந்தித்திருக்கின்றனர்.

இந்த சந்திப்பை ஒரு பிரதான இராஜதந்திர நகர்வாகக் கருதவேண்டியதில்லை. அவ்வாறான போலியான நம்பிக்கைகளை மக்களுக்கு ஊட்டுவது தவறானது. இது ஒரு குறியீட்டு முக்கியத்துவமுடையது. ஏனெனில், இலங்கையின் ஜனாதிபதி கூட்டமைப்பை சந்திப்பதை தொடர்ந்தும் தவிர்த்து வருகின்றார். சம்பந்தன் பலமுறை கேட்டும் இதுவரை ஜனாதிபதி பதிலளிக்கவில்லை. இதேபோன்று அண்மையில் புலம்பெயர் தமிழ் சமூகத்துடன் தான் பேசவுள்ளாரெனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இது தொடர்பில் சர்ச்சைகள் எழுந்தபோது, தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் எவற்றுடனும் அரசாங்கம் பேச்சுக்களை நடத்தாதென்று, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்திருந்தார். ஆனால், இராஜாங்க திணைக்கள சந்திப்பில் பங்குகொண்ட உலகத் தமிழர் பேரவை இலங்கையில் தடை செய்யப்பட்டிருக்கும் புலம்பெயர் அமைப்புகளில் ஒன்றாகும்.

இலங்கையில் தடை செய்யப்பட்டிருக்கும் புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன்தான் இராஜாங்கத் திணைக்களம் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களை மேற்கொண்டிருக்கின்றது. அவ்வாறான அமைப்பின் பிரதிநிதிகளுடன் இணைந்தே கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் சந்திப்பில் ஈடுபட்டிருக்கின்றனர். இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்கா அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது. இவர்களுடன் அரசாங்கம் பேச வேண்டும் என்னும் செய்தியை அமெரிக்கா கூற முற்படுகின்றதா?

அரசாங்கம் பேசினாலும் பேசாவிட்டாலும் - தாம் கூட்டமைப்புடனும் புலம்பெயர் சமூகத்துடனும் தொடர்ந்தும் உரையாடல்களில் இருப்போம் என்பதையும் அமெரிக்கா உணர்த்த முற்படுகின்றதா? அமெரிக்காவை பொறுத்தவரையில் இவ்வாறான சந்திப்புக்கள் அதன் உலகளாவிய நகர்வுகளில் ஓர் அங்கமாகும். இலங்கை தொடர்பான விடயங்களை அமெரிக்க அதிகாரிகளுக்கு சுமந்திரன் குழுவினர் கூறித்தான் அவர்கள் அறியவேண்டும் என்பதில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேசியே தாம் முடிவுகளை எடுக்கின்றோம் என்னும் செய்தியை வெளிப்படுத்தவே இவ்வாறான சந்திப்புக்கள் அவர்களுக்கு பயன்படலாம்.

# கார்த்திகை தீபங்கள்!

- அலசுவது இராஜதந்திரி -

*இந்திய இராணுவம் 1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்தபோது, ஒரு தடவை சிவராத்திரி தருணத்தில், யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்திருந்த ‘ஈழநாடு’ அலுவலகத்துக்கு இளம் இராணுவ அதிகாரி ஒருவர் வந்திருந்தார். அவர் அன்று கடமையிலிருந்த செய்தி ஆசிரியர் கே. ஜி. மகாதேவாவிடம் சிவராத்திரியை எவ்வித அச்சமுமின்றி கொண்டாடுமாறு தெரிவித்து செய்தி வெளியிடவும் எனக் கேட்டுக்கொண்டார்.*

*அந்த இளம் அதிகாரி அன்று அவ்வாறு கேட்டுக்கொண்டமைக்கான காரணம், இந்திய இராணுவம் சாதாரண மக்களின் எந்த விதமான வைபவங்கள், கொண்டாட்டங்களில் குறுக்கிடப்போவதில்லை என்பதை தெரிவிப்பதாகவும், அதேசமயம் இந்திய இராணுவத்தினரில் பலர் இந்துக்களாக இருந்தமையுமாகும்.*

*இந்திய இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்தில் குதித்திருந்தாலும் மக்கள் அபிமானத்தைப் பெற வேண்டுமென்பதிலும் தனது கவனத்தைத் திருப்பியிருந்தது. ஏனெனில், இந்திய இராணுவம் புலிகளுக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்தபோது மிக மூர்க்கத்தனமாக நடந்து கொண்டிருந்தது.*

*இதனால், இந்திய இராணுவத்தை பெரிதும் நம்பியிருந்த யாழ்ப்பாண மக்கள், தாம் இந்திய இராணுவம் தொடர்பாகக் கொண்டிருந்த நல்லெண்ணத்தை இழக்க ஆரம்பித்திருந்தனர். எனவே, தம்மீதான நல்லெண்ணம் சிதையுமேயானால் தமது எதிரியான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அது வாய்ப்பாக அமையும் என்ற காரணத்தினாலேயே கூடியவரை இந்திய இராணுவத்தினர் மக்களை நல்லெண்ணத்தோடு அணுக முன்வந்திருந்தனர்.*

*இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் கால்பதித்த குறுகிய காலத்திலேயே புலிகளுக்கு எதிராக யுத்தத்தை தொடுத்திருந்தது. அதேசமயம், மக்களுடனான நல்லெண்ணத்தை பேண வேண்டுமென்பதில் அக்கறை காட்டினர். இதுவிடயத்தில் புலிகள் குறுக்கீடுகளை போட்டுமிருந்தனர். ஆனால், அவற்றை முறியடித்து இந்திய படையினர் நடந்து கொண்டிருந்தனர்.*

*ஆனால், கடந்த சில தினங்களாக வட பகுதியின் பல்வேறு இடங்களில் தீபாவளியை அண்டி வந்திருந்த கார்த்திகை தீபத்தீருநாளை முன்னிட்டு வீடுகளில் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் ஏற்றப்பட்ட தீபங்கள் குறித்து யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் ஆயுதப் படையினர் குறுக்கீடுகளை ஏற்படுத்தினரெனவும், விசாரணைகளை மேற்கொண்டனரெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*வடக்கு - கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளை முறியடித்து பத்து வருடங்களுக்கு மேலாகியும் ஆயுதப் படையினர் போதியளவு நல்லெண்ணத்தை மக்களோடு ஏற்படுத்துவதில் தவறி வருகின்றனர் என்பதையே அறிய முடிகின்றது.*

*ஒரு தேசத்தையோ, ஒரு பிரதேசத்தையோ வேறோர் இனத்தைக்கொண்ட இராணுவம் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருகின்றதென்றால், தனது கட்டுப்பாட்டின்கீழ் வருகின்ற மக்களின் பண்பாடுகள், பாரம்பரியங்கள், கலாசார நடவடிக்கைகள் பற்றி அறிந்து வைத்து அவற்றின் அடிப்படையில் நல்லெண்ணங்களை கட்டியெழுப்புவதே உசிதமான நடவடிக்கையாக அமைய முடியும். இதைவிடுத்து மக்கள் மனதைப் புண்படுத்தும் விதத்தில் நடந்து கொள்ளும் பட்சத்தில் மக்கள் மனதை வெல்வதில் தோல்வியையே தழுவ முடியும்.*

*யாழ்ப்பாணத்திலும் கார்த்திகை தீப வழிபாடு குறித்து போதிய விளக்கமின்றி படையினர் சில இடங்களில் தவறாக நடந்து கொண்டிருந்தனர் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*ஆயுதப் படையினரைப் பொறுத்தவரை சாதாரண அடிமட்ட சிப்பாயைவிட அதிகாரிகள் தரத்திலிருப்போர் தாம் பணியாற்றுகின்ற பிரதேசத்தின் சமூக, கலாசார தன்மைகள் குறித்து நன்கறிந்து வைத்திருப்பதோடு தமக்குக் கீழே பணியாற்றுகின்ற சிப்பாய்களையும் உரிய விதத்தில் நெறிப்படுத்த வேண்டும்.*


*ஆனால், யாழ்ப்பாணத்தில் பணியாற்றுகின்ற படையினரை பொறுத்தவரை அங்குள்ள பெரும்பாலான மக்களின் முக்கிய நிகழ்வுகள் குறித்து உரிய விளக்கத்தை கொண்டுள்ளார்களோ ? என்றே எண்ணத் தோன்றுகின்றது.*

*கர்த்திகை மாதம் என்றதுமே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்தநாள் நவம்பர் 26ஆம் திகதி வருவதையும், மாவீரர் வாரம் அதனோடிணைந்ததாக இருப்பதையும் குறிக்கும் விதத்திலேயே வீடுகள் தோறும் மக்கள் தீபங்களை ஏற்றுகின்றார்கள் என்ற தப்பபிப்பிராயத்தையே படையினர் கொண்டிருப்பதை கார்த்திகை தீப திருநாள் தினத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.*

*கார்த்திகை தீபத் திருநாள் என்பது கி. மு. 2500ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே கொண்டாடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், ஆசியப் பிரதேசத்தில் வடகீழ் மழைப்பருவம் ஆரம்பிக்கும்போது மின்சாரப் பாவனைகள் வரும் முன்னர் மக்கள் இருளை அகற்ற தீபங்களை ஏற்றிமையே தீபவாளி திருநாளாகவும் , கார்த்திகை தீபத் திருநாளாகவும் நாளடைவில் மத ரீதியாக முக்கியத்துவம் பெற்றன என்று சமூக வியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.*

*எவ்வாறாயினும் மக்கள் ஒரு புனிதமான முறையில் தமது வாழ்வியலோடு இணைத்துக்கொண்ட வைபங்களை அணுகும்போது அந்த வைபவங்கள் பற்றி போதிய அறிவற்றவர்கள், அவைபற்றி தகுந்த முறையில் அறிந்து வைத்து கடமையாற்றுவதே நல்லெண்ணத்தை வளர்ப்பதில் பெரிதும் உதவும் எனக் கருதலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



நவம்பர் - 20 சனிக்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை- 04
நல்ல நேரம் : 7.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பிரதமை



## இன்றைய ராசிபலன்

**20.11.2021**

**மேடம்**
கவலைகள் மறையும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நிதி முன்னேற்றம் ஏற்படும். ஆரோக்கியம் பற்றிய கவலை தீரும். பெற்றோர் உடல்நலனில் இருந்த சிரமங்கள் குறையும்.

**இடபம்**
இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உண்டு. தவையின்றி யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். குடும்பத்தில் புதிய உறவுகள் வர வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்**
கவலைகள் தீரும். சிலருக்கு காதல் உணர்வு அதிகரிக்கும். பேசும்போது கவனம் தேவை. முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். பணியிடக் கவலை தீரும். பலநாள் கனவு ஒன்று நிறைவேறும்.

**கடகம்**
வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். பெரியவர்களின் ஆசியும், அன்பும் கிடைக்கும். கலகலப்பான நாள்.பிறருக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். அமைதியான நாள்.

**சிம்மம்**
கடந்த கால வருத்தங்களை நினைக்காமல் அவற்றை விலக்குவது நல்லது. மனச்சாட்சிப்படி நடப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். நிம்மதியான நாள். எதையும் ஆராயாமல் ஏற்க வேண்டாம்.

**கன்னி**
யோகமான நாள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். நிதிநிலை உயர்வதற்காக நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும்.பகையொன்று நட்பாகும். வீட்டில் கலகலப்பு அதிகரிக்கும்.

**துலாம்**
நேற்றிருந்த கவலை ஒன்று முற்றிலும் தீரும். நட்பு வளரும். வாக்குவாதத்தால் தொல்லை வராதபடி கவனமாக இருங்கள். வீட்டில் புதிய பொருள் சேர்வதற்கான முயற்சிகளை எடுப்பீர்கள்.

**விருட்சிகம்**
பணியாளர்கள் பின்விளைவுகளை அறிந்து செயல்படுவது நல்லது. புதிதாக அறிமுகமாகும் நபர்களால் மகிழ்ச்சி ஏற்படும். மகிழ்ச்சியான நாள். உங்களுக்கான முக்கியத்துவம் அதிகரிக்கும்.

**தனுசு**
நல்லவர்களை பகைத்து கொள்வது தப்பு என்பதை உணர்வீர்கள் நீங்கள் எண்ணிய விஷயங்கள் இன்று சிறப்பாக நடைபெறும். பொறுப்பு ஒன்றை நல்ல முறையில் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்**
குடும்ப விஷயங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். மனநிம்மதி கூடும். குடும்ப சச்சரவில் அமைதி தேவை. நெருக்கமானவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்**
குழந்தைகளின் வாழ்வில் செழிப்பான மாற்றம் உண்டு. மற்றவர்களின் மனம் நோகக்கூடாது என்ற கவனம் தேவை. திடீர் அதிர்ஷ்டம் உங்களை திக்குமுக்காட வைக்கும். கலகலப்பான நாள்.

**மீனம்**
குதூகலம் அளிக்கும் விஷயம் ஒன்று இன்று நடக்கும். நட்பு வட்டம் விரிவடையும். சகோதரர்களின் மூலம் உதவி கிடைக்கும். மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் ஒருவரின் சிறப்பு அதிகரிக்கும்.

# நரேந்திர மோடி வெளியிட்ட அறிவிப்பு போராடிய மக்களுக்கு கிடைத்த வெற்றி



## தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கருத்து

*சென்னை, நவ. 20,*

காரணம் எதுவாக இருந்தாலும், மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறும் பிரதமர் மோடியின் அறிவிப்பை வரவேற்கிறேன் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "மூன்று வேளாண் சட்டங்களும் திரும்பப் பெறப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்திருப்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இது கடந்த ஓராண்டுகாலமாக இம்மூன்று சட்டங்களையும் எதிர்த்துப் போராடிய வேளாண் பெருங்குடி மக்களுக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

மூன்று சட்டங்களையும் திரும்பப் பெறும் பேச்சுக்கே இடமில்லை என்று சொல்லி வந்த மத்திய அரசை இந்தியா முழுக்க நடந்துவந்த இடைவிடாத போராட்டமே மனமாற்றம் செய்து இறங்கி வர வைத்தது. இந்த மூன்று சட்டங்களும் கொண்டுவரப்பட்ட போது தொடக்க நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது. பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியது. மக்களவையிலும் மாநிலங்களவையிலும் எதிர்த்து வாக்களித்தது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்தோம்.

மக்கள் மன்றத்திலும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தோம். தி.மு.க. சார்பில் மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கூட்டணிக் கட்சியினருடன் இணைந்து உண்ணாநிலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. விவசாய சங்கங்கள் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டோம். சட்டமன்றத்திலும் குரல் கொடுத்தோம். மூன்று சட்டங்களுக்கும் எதிராகச் சட்டமன்றத்தில் தீர்மானம் போடச் சொன்னோம். ஆனால், அன்றைய அ.தி.மு.க. ஆட்சி அதைச் செய்யவில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

# படைப்பு சுதந்திரம் சூர்யாவுக்கு மட்டுமா? பாரதிராஜாவுக்கு அன்புமணி பதில் கடிதம்

*சென்னை, நவ. 20,*

வானளாவிய படைப்புச் சுதந்திரம் நடிகர் சூர்யாவுக்கு மட்டும்தானா?, ராமதாஸின் சமூக நீதி சாதனைகள் தெரியுமா என்று அன்புமணி ராமதாஸ் இயக்குநர் பாரதிராஜாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அன்புமணி ராமதாஸ் இயக்குநர் பாரதி ராஜாவுக்கு எழுதியுள்ள நீண்ட பதில் கடிதத்திலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் முக்கியமாகத் தெரிவித்திருப்பதாவது:

"ஜெய்பீம் சர்ச்சை தொடர்பாக தாங்கள் எனக்குக் கடிதம் எழுதியிருந்தீர்கள். களப்போராளியாகவும், யாருமே துணியாத காலத்தில் சமூக நீதியைத் திரைப்படத்தில் பதிவு செய்தவர் என்ற முறையிலும், படைப்பாளியாகவும் எனக்குக் கடிதம் எழுதியதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள், மகிழ்ச்சி.

ஒடுக்கப்பட்ட மக்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய உரிமைகளுக்காக போராட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்காது. இன்று தமிழ்நாட்டில் அதிகமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடி அவர்களுக்கு சமூக நீதியை பெற்றுத் தந்ததில் ராமதாஸுக்கு நிகராக இங்கு வேறு யாரும் இல்லை.

ஜெய்பீம் திரைப்பட சர்ச்சை சாதிப் பிரச்னை அல்ல, அரசியல் பிரச்னையும் அல்ல. இது ஒரு சமூகப் பிரச்னை. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டு மக்களின் உணவு உள்ளிட்ட



தேவைகளுக்காகவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் பெருங்குடி சமுதாயமான வன்னியர் சமூகம் திட்டமிட்டு, தொடர்ந்து இழிவுபடுத்தப்படுவது தொடர்பான சமூகப் பிரச்சனை. இந்தப் பிரச்சனையில் உங்களுக்கும் திரைத்துறையினருக்கும் மிகப் பெரிய புரிதல் இல்லை என்பது எனக்கு மிகவும் வருத்தம் அளிக்கிறது.

வானளாவிய படைப்புச் சுதந்திரம் நடிகர் சூர்யாவுக்கு மட்டும்தானா? இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனுடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்க முனைந்த நடிகர் விஜய் சேதுபதிக்கு அந்தப் படைப்புச் சுதந்திரம் மறுக்கப்பட்டது ஏன்? கடுமையான கண்டனக் கடிதத்தைத் தாங்கள்தான் எழுதியிருந்தீர்கள், நினைவு இருக்கிறதா?" என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.


# பிரபல எழுத்தாளர் கோவி. மணிசேகரன் காலமானார்

*சென்னை, நவ. 20,*

150இற்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ள பிரபல எழுத்தாளரும், இயக்குநருமான கோவி. மணிசேகரன் சென்னையில் நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 95.

வேலூர் மாவட்டம் சல்லிவன்பேட்டையில் 1927ஆம் ஆண்டு மே 2ஆம் திகதி கோவி. மணிசேகரன் பிறந்தார். தனது 16 வயது முதல் சுமார் 76 ஆண்டுகள் இலக்கியப் பணி யாற்றி வந்த கோவி. மணிசேகரன் சென்னை கே.கே.நகரில் வசித்து வந்தார்.

இந்நிலையில், வயது முதிர்வு காரணமாக தனது 95ஆம் வயதில் அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் காலமானார்.



கோவி.மணிசேகரன் 95 சரித்திர நாவல்கள், 47 சமூக நாவல்கள், 5 நாடகநூல்கள், 2 மொழிபெயர்ப்பு நூல்கள், 10 கவிதை நூல்கள் மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு கதைகளை எழுதியுள்ளார். குறிப்பாக அவர் எழுதிய 'குற்றாலக் குறிஞ்சி' என்ற நூலுக்கு 1992ஆம் ஆண்டு சாகித்ய அக்கடமி விருது கிடைத்தது.

கோவி. மணிசேகரன் மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின், தலைவர்கள், இலக்கியப் பிரமுகர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட இரங்கல் செய்தியில், "சாகித்ய அக்கடமி விருது பெற்ற மணிசேகரன், கே. பாலசந்தரிடம் 21ஆண்டுகளுக்கு மேலாக உதவி இயக்குநராக பணியாற்றி, 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் எழுத்து உலகத்துக்குப் பெருமையும் சேர்த்தவர். வரலாற்றுப் புதினமான குற்றாலக்குறிஞ்சியும், தென்னங்கீற்று திரைப்படமும் அவர் பெயரை இன்னும்சொல்லுகின்றன. தமிழ் எழுத்துலகம் மாபெரும் எழுத்தாளரை இழந்து தவிக்கிறது." என்று தெரிவித்துள்ளார்.

# பட்ஜெட் முடிந்தவுடனே அமைச்சரவை மாற்றம்!

## இரு இளம் அரசியல்வாதிகளுக்கு அமைச்சு பதவி

**கொழும்பு, நவ. 20**

**வரவு-செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்த பின்னர், அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இதன்படி சில அமைச்சுகள் கைமாறவுள்ளதுடன், மேலும் சில அமைச்சுகளுடன் புதிய விடயதானங்கள் இணைக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன எனக் கூறப்படுகின்றது.

அரச நிறுவனங்களின் உயர் பதவிகளிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தவும் உத்தேசித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர்களான ரொஷான் ரணசிங்க, சனத் நிஷாந்த ஆகிய இருவரும் அமைச்சரவைக்கு உள்வாங்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்மீதான விவாதம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகி, டிசெம்பர் 10 ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டில் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை அதிகரிப்பு!

## உதவிக்கு விசேட தொலைபேசி இலக்கம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 20

பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறு பாதிக்கப்படும் பெண்களின் உதவிக்காக விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின், மகளிர் உதவி மத்திய நிலையத்தின் 1938 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 400 முதல் 500 தொலைபேசி அழைப்புக்கள் வருவதாக அந்த உதவி மத்திய நிலையத்தின் அதிகாரியான மாநெல் ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்வரும் அழைப்புகளில் 50 வீதம் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை தொடர்பானவை மற்றும் பெண்களுக்கு எதிரான பிற வன்முறைகள் குறித்து சுமார் 80 முதல் 100 முறைப்பாடுகள் பெறப்படுகின்றன.

மேலும், குடும்பங்களில் நிலவும் பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் ஆண்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி இருப்பது போன்ற காரணங்களால் இதுபோன்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கோவிட் தொற்றுநோய் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த காலங்களில் இவ்வாறான அழைப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் சுமார் 4,000 அழைப்புகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகளின் தன்மை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் அறிவித்த பின்னர் அவர்கள், குடும்ப ஆலோசனைச் சேவைகள் மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களை புனர்வாழ்வு செயல்முறை என்பவற்றுக்கு உட்படுத்துகின்றனர்.

அத்துடன், பாரிய அசம்பாவிதங்கள் ஏற்படுமிடத்து, பொலிஸாரின் உதவியுடன் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

# அரசுடன் ‘டீல்’ கிடையாது!

## கூறுகிறார் ரிஷாத் பதியுதீன்

கொழும்பு, நவ. 20

“அரசுடன் எனக்கோ, எனது கட்சிக்கோ எவ்வித ‘டீலும்’ கிடையாது. வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தீர்மானமொன்று எடுக்கப்படும்.” - என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நான் மஹிந்தவின் அமைச்சரவையில் அங்கம் வகித்தவன். 9 வருடங்கள் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ அதிகாரங்



களுடன் செயற்பட்டார். வடக்கு - கிழக்கில் அபிவிருத்திகள் இடம்பெற்றன. அதன் பங்காளிகளாக நாமும் இருந்தோம்.

கடந்த இரு வருடங்களில் 20 ஆவது திருத்தம் ஊடாக அவரின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தையே நான் சபையில் சுட்டிக்காட்டியிருந்தேன். ஜனாதிபதி செயலணிக்கு ஞானசார தேரரை நியமித்தது தவறு-என்றார். (அ)

# எச்சரிக்கை தன்மை கொண்ட பகுதிகளுக்கு விரைவாக மூன்றாம் கட்டத் தடுப்பூசி ஏற்றல்

கொழும்பு, நவ. 20

கொரோனா கொத்தணிகள் உருவாகும் எச்சரிக்கை தன்மை கொண்ட பிரதேசங்களில் விரைவாக மூன்றாம் கட்ட தடுப்பூசி பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

20 வயதுக்கும் மேற்பட்ட ஏனைய நோய்த் தாக்கத்துக்கு உள்ளானவர்களுக்காக மூன்றாம் கட்டக் கொரோனா தடுப்பூசி வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ‘ஆமி அமில’ கைதானார்

கொழும்பு, நவ. 20

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக்குழுவின் உறுப்பினர் ஒருவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

‘ஆமி அமில’ என்ற நபரே தங்காலைப் பகுதியில் வைத்துக் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஆட்காட்டிவெளி துயிலும் இல்லத்தின் பொதுச்சுடர் ஏற்றும் பீடம் இடித்தழிப்பு!

## நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு கண்டனம்

மன்னார், நவ. 20

மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தின் பிரதான சுடர் ஏற்றும் பீடம் முற்றாக இடித்தழிக்கப்பட்டது.

அரச பயங்கரவாதத்தின் மிலேச்சத்தனமான செயல் என மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக துயிலுமில்லம் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டாளரும் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவருமாகிய வி.எஸ் சிவகரன் தெரிவிக்கையில்-



துயிலுமில்ல நுழைவாயிலுக்கு அருகில் இராணுவம் உள்ளபோது யார் உடைத்திருக்க முடியும் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

பல வருடங்களாக இருந்த இந்த பொதுச்சுடர் ஏற்றும் தீபம் பீடத்தை சற்றும் மனிதாபிமானம் இன்றி மிலேச்சத்தனமான முறையில் உடைத்துச் சேதப்படுத்தி உள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை தகவல் கிடைத்ததும் நானும் துயிலுமில்ல ஏற்பாட்டுக் குழுவின் பொருளாளரும் மன்னார் நகர சபை தலைவருமாகிய அன்ரனி டேவிற்சனும் சென்று பார்வையிட்டோம்.

எனவே இவ்வாறு தீபமேற்றும் பீடத்தை அழிப்பதன் ஊடாக அரசு சிற்றின்பம் அடையலாம்.

தமிழ் மக்களின் மனங்களில் அனுதினமும் தியாகச் சுடராக ஒளிர்ந்துகொண்டிருக்கும் எமது விடுதலை வீரர்களின் தியாகத்தையோ இலட்சிய வேட்கையையோ அரசால் சிதைத்து விட முடியாது என்பதை இக் கேவலமான செயலில் ஈடுபடுவோர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இச்சம்பவம் மாவீரர்களின் பெற்றோர்கள் மத்தியில் மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது-என்றார். (அ)

# முடக்கத்தால் தவறவிடப்பட்ட பாடநெறிகளை முழுமைப்படுத்த புதிய பாடத்திட்டம் தேவை!

கொழும்பு, நவ. 20

கோவிட் பரவல் காரணமாக நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளினதும் கல்வி நடவடிக்கைகள், இடைநிறுத்தப்பட்டு மீண்டும் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், பாடசாலை மாணவர்களுக்கு தவறவிடப்பட்ட பாடநெறிகளை முழுமைப்படுத்துவதற்கு, தெரிவு செய்யப்பட்ட புதிய பாடத்திட்டம் ஒன்றைக் கல்வி அமைச்சு தயாரிக்கவேண்டும் என ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தவறவிடப்பட்ட பாடநெறிகளை முழுமைப்படுத்த ஆசிரியர்களும் அதிபர்களும் தயாராகவுள்ளதாகவும் மேற்படி சங்கங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# செவ்வாயன்று அவசரமாக கூடுகிறது யாழ். கொரோனா ஒழிப்பு செயலணி!

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வாரத்திலிருந்து கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் யாழ். மாவட்ட கொரோனா ஒழிப்பு செயலணி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூடி தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராயவுள்ளதாக, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

யாழ் .மாவட்ட கொரோனா ஒழிப்புச் செயலணியின் தலைவரின் தலைமையில் சுகாதாரப் பிரிவினர் மற்றும் ஏனைய துறைசார் அதிகாரிகளுடன் இந்தக் கூட்டம் யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுள்ள நிலைமையில் எடுக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (அ)

# உணவுப்பற்றாக்குறையை எதிர்கொள்ள தயாராவோம்

## வர்த்தக அமைச்சர் அழைப்பு

கொழும்பு, நவ. 20

எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ள பொது மக்கள் தயாராக இருக்க வேண்டும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நிகழ்வொன்றில் பேசிய அமைச்சர், சீனாவில் உலகின் மிகப்பெரிய மக்கள்தொகை உள்ளது. அதே நேரத்தில் அவர்களின் உணவுத் தேவையும் அதிகமாக உள்ளது.

கொரோனா வைரஸிலிருந்து உருவாகும் உலக உணவுப் பற்றாக்குறைக்கு நாடு தயாராக வேண்டும் என்று சீன அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்தது.

சிறிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடு என்ற வகையில் இலங்கையும் ஆபத்தில் இருக்கிறது. எனவே, இதுபோன்ற தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க, உணவு வழங்கல் மற்றும் அதிக பொறுப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.(அ)

# மாகாண சபைத் தேர்தலை நடத்த தேர்தல் முறை திருத்தம் கட்டாயம்

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு



**கொழும்பு, நவ. 20**

**மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டுமானால் தேர்தல் முறைமை தொடர்பான திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டு கட்டாயம் சபையில் அனுமதி பெறப்படவேண்டுமென வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சபையில் அறிவித்தார்.**

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இந்த மாகாண சபை தேர்தல் இவ்வளவு காலம் இடம்பெறாமல் இருப்பதற்கு கடந்த நல்லாட்சி அரசாங்கமே காரணம். தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதாலேயே இந்த தேர்தல் இதுவரை காலந்தாழ்த்தப்பட்டு வருகின்றது. கடந்த அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாடுகளின் காரணமாகவே தொடர்ச்சியான தேர்தல் இடம்பெறாமல் இருக்கிறது.

அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையிலான குழு வாரத்துக்கு இருமுறை கூடி இதுதொடர்பில் ஆராய்ந்து வருகின்றது.

ஆகவே, எவ்வளவு விரையில் தேர்தல் முறைமைதொடர்பில் இறுதி முடிவெடுக்கப்பட்டு அந்த திருத்தம் சபையில் அனுமதிக்கப்பட்டால் மாத்திரமே மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும்-என்றார். (அ)

# பிரதான ஐந்து மாவட்டங்களில் புதிய கொரோனா கொத்தணி?

கொழும்பு, நவ. 20

அநுராதபுரம், அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் கொரோனா கொத்தணிகள் உருவாகும் எச்சரிக்கை நிலை தோன்றியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பின் காரணமாகவே இந்த எச்சரிக்கை நிலை உருவாகியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சுகாதார நெறிமுறைகளை மீறி குறித்த பகுதிகளில் நடைபெறும் திருமணங்கள், மத நடவடிக்கைகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளால் இந்த கொத்தணிகள் உருவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது தினசரி 700 இற்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் பதிவாகின்றனர். இறப்பு எண்ணிக்கையும் 20 ஆக காணப்படுகிறது. இது சுகாதார அதிகாரிகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே, நாடு இயல்பு நிலைக்கு வரும் வரை மக்கள் அதிக அளவில் ஒன்று கூடும் நிகழ்வுகளை தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.(அ)

# முகக்கவசம் அணிய கோரியமையால் சபையில் நேற்று கடும் வாக்குவாதம்!

கொழும்பு, நவ. 20

எதிர்த் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் முகக்கவசம் அணிவதில்லை. கொரோனா நிலைமையை கருத்தில் கொண்டு முகக்கவசம் அணிய வேண்டியது அவசியம் என்ற சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தியதால் சபையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கருத்துக்கு பதில் வழங்கிய ஹர்ஷன ராஜகருணா எம்.பி., "ஜனாதிபதியின் இரண்டாவது பூர்த்தியை முன்னிட்டு அநுராதபுரத்தில் விசேட நிகழ்வுகள் நேற்று(நேற்று முன்தினம்) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அந்த நிகழ்வில் 2 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டிருந்தார்கள். அதன்போது கொரோனா தொற்றுப்பரவல் ஏற்படாதா? எதிர்த்தரப்பினால் ஏற்பாடு செய்யப்படும் செயற்பாடுகளில் மாத்திரம் தொற்று பரவல் தீவிரமடைகின்றதா" என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு, பலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கு தொற்று உறுதியாகியுள்ளது. அதன் காரணமாகவே முகக்கவசம் அணிய வேண்டும் என்று வழியுறுத்தினேன். வேறு காரணங்களுக்காக குறிப்பிடவில்லை"-என்று குறிப்பிட்டார். (அ)

# காஸ் தட்டுப்பாட்டுக்கு 6 நாள்களுக்குள் தீர்வு!

கொழும்பு, நவ. 20

ஆறு நாட்களுக்குள் சமையல் எரிவாயுக்கான தட்டுப்பாடு நீங்கும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் இன்னும் ஆறு நாட்களுக்குள், அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் அந்தத் தொகையை வழங்கக்கூடியதாக இருக்கும் எனவும் அது கூறியுள்ளது.

அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி என்பனவற்றின் தலையீட்டுடன், அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப் பிரிவின் பணிப்பாளர் ஜானக பத்திரண தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்களுக்கு ஒரு முறை எரிவாயு கப்பல் நாட்டை வந்தடைகிறது. எதிர்காலத்திலும் இந்த நிலைமை நீடிக்கும். எனவே, சமையல் எரிவாயு கிடைப்பதில் தற்போது எவ்வித குறைப்பாடும்இல்லையென அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவது நிச்சயமே!

## பந்துல சமன்குமார தெரிவிப்பு!

கொழும்பு,. நவ. 20

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நீண்டகாலமாக மூடி வைத்தால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவது நிச்சயம் என பெற்றோலியக் கிளையின் வணிகத் தொழில்கள் மற்றும் முற்போக்கு ஊழியர் சங்கத்தின் தலைவர் பந்துல சமன்குமார தெரிவித்துள்ளார்.

சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை இறக்குமதி செய்வதன் மூலம் நீண்டகால எரிபொருள் பிரச்னையை சமாளிக்க முடியாது என அவர் மேலும் கூறினார்.

தற்போதைக்கு எரிபொருள் தட்டுப்பாடு இல்லையென்றாலும், நீண்ட காலப் பாதிப்புகளை தவிர்ப்பதற்காக நாட்டில் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கொரோனாவால் தென்மராட்சியில் 16 நாட்களில் மட்டும் 4 பேர் மரணம்!

யாழ்ப்பாணம், நவ. 20

தென்மராட்சிப் பகுதியில் கொரோனாப் பரவல் மிகத் தீவிரம் பெற்றுள்ளதுடன், கடந்த 16 நாட்களில் மாத்திரம் 118 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு, 04 மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

தினமும் சராசரியாக 8 முதல் 10 தொற்றாளர்கள் என்றளவில் எண்ணிக்கை உயரத் தொடங்கி விட்டதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

சுகாதார நடைமுறைகளை மக்கள் இறுக்கமாகப் பின்பற்றாமை காரணமாக சமூகத்தில் தொற்று தீவிரமாகப் பரவியிருப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுவதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் அனைவரும் நோய் அறிகுறிகளுடன் தாமாக வந்து அன்ரிஜென் பரிசோதனைக்கு தம்மை உட்படுத்திக்கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலவச துரித அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் அறிவித்துள்ளனர்.

அது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட இடங்களில் வசிப்பவர்கள் கொரோனா அறிகுறிகள் தென்படுமாயின், உடனடியாக தங்களை சுய தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள்.

அத்தோடு, காலதாமதமின்றி கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை, வரணி பிரதேச வைத்தியசாலை அல்லது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் துரித அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளுங்கள்.

இவற்றுக்கு மேலதிகமாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய மூன்று தினங்களும் காலை 8.30 மணிக்கு குறித்த பரிசோதனை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது-என்றார். (அ)

# நாணய நிதியத்திடம் கடன் பெறமாட்டோம்

## அடித்துச் சொல்கிறார் மத்தியவங்கி ஆளுநர்

கொழும்பு, நவ. 20

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்ரமசிங்கவோ அல்லது ஹர்ஷ டி சில்வா கூறுவது போல டொலர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக் கொள்ளப் போவ தில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக் கொள்ளும் போது அரசாங்கம் பல்வேறு நிபந்தனைகளுக்கு உட்படவேண்டிய நிலை வரும்.

ஜனாதிபதி கோட்டாபயவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை மூலமான வேலைத் திட்டத்துக்கு அது தடையாக அமையலாம்.

அதற்கிணங்க அவ்வாறான நிபந்தனைகளுக்கு உட்பட்டு சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவதற்கு அரசாங்கம் தயாரில்லை-என்றார். (அ)

# பாதுகாப்பு அமைச்சுக்கு எதற்காக அதிகளவு நிதி?

## செல்வம் எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு, நவ. 20

**“நாடு வறுமையில் சிக்கித் தவிக்கையில் இராணுவத்துக்கு எதற்கு அதிக நிதி ஒதுக்கப்பட் டுள்ளது. நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தவா இந்த நகர்வு.”- என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பொருட்களின் விலை உயர் வால் மக்கள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் மேலும் உயரும் என எதிர்வுகூறப்படுகின்றது. இதனை தடுப்பதற்கான வல் லமை இந்த அரசிடம் இல்லை.

இந்நிலையில் இராணுவத் துக்கு பலகோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. நாடு வறுமையில் சிக்கித்தவிக்கையில் எதற்கு இராணுவத்துக்கு அதிக நிதி? இராணுவ ஆட்சியை ஏற்படுத் தவா இவ்வாறு அதிக நிதி ஒதுக் கப்படுகின்றது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

புலிகள் அழிக்கப்பட்டுவிட் டனர் எனக் கூறப்படுகின்றது. எனவே, யாருடன் போரிடப் போகின்றீர்கள்? பாகிஸ்தானு டனா, இந்தியாவுடனா அல் லது தமிழர்களுடனா என்ற கேள்வியும் எழுகின்றது - என் றார். (அ)

# தோட்ட மக்களை ஏமாற்றிய பட்ஜெட்!

## சபையில் பொன்சேகா விசனம்

கொழும்பு, நவ. 20

“மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மீண்டுமொரு முறை இந்த அரசால் ஏமாற்றப் பட்டுள்ளனர்.” - என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எந்நாளும் ஏமாற்றப்படுகின்றனர். இம் முறையும் பாதீடு ஊடாக ஏமாற்றப்பட்டுள்ளனர். மலை யக பெருந்தோட்டத் தொழி லாளர்களுக்கு வீடுகளை நிர்மா ணிப்பதற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

பெருந்தோட்டப்பகுதி களில் வாழும் மக்களுக்கு குறைந்த பட்சம் ஒரு லட்சம் வீடுகளா வது தேவை. அப்படியானால் ஒரு வீட்டுக்கு 5 ஆயிரம் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த தொகையை வைத்துக் கொண்டு மலசலகூடம் ஒன்றைக்கூட கட்டமுடியாது.

தோட்ட மக்களுக்கு வீடொன்றை நிர்மாணிப்பதற்கு குறைந்தபட்சம் ஒன்றரை மில்லியன் ரூபா தேவை-என் றார்.

# யொஹானிக்கு சபையில் செவ்வாயன்று பாராட்டு!

மெனிகே மகே ஹிதே பாட லின் மூலம் பிரபலமான பாடகி யொஹானி திலோகா டி சில் வாவுக்கு பாராளுமன்றத்தில் பாராட்டு விழா நடைபெறவுள் ளது. எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

பாராளுமன்ற பெண் உறுப் பினர்களின் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்துள்ளதாக ஒன்றி யத்தின் செயலாளரும் பாராளு மன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலா ளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்ற பெண் உறுப் பினர்களின் ஒன்றியத்தின் தலை வர், ஆரம்ப சுகாதார சேவை கள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப் பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே உள்ளிட்ட பாராளு மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)




# ஜயஸ்ரீ மஹா போதியில் நேற்று வழிபட்டனர் ஜனாதிபதி, பிரதமர்

கொழும்பு, நவ. 20

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் நேற்று வெள்ளிக்கிழமை காலை, வர லாற்றுச் சிறப்புமிக்க ஜயஸ்ரீ மஹா போதியில் பூசை வழி பாடுகளில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை புண்ணிய ஸ்தலத்துக்கு சென்ற ஜனாதி பதி, அட்டமஸ்தானாதிபதி கலாநிதி சங்கைக்குரிய பல்லே கம சிறிநிவாச தேரரைச் சந் தித்து ஆசிர்வாதங்களைப் பெற் றுக்கொண்டார்.

அத்துடன், வரலாற்றுச் சிறப்புமிக்க ஜயஸ்ரீ மஹா போதியில், பலகாரப் பூசையி லும் ஈடுபட்டார்.

ஜயஸ்ரீ மஹா போதியில் வழிபாட்டுக்காக வருகை தந்திருந்த பொதுமக்களிடம், ஜனாதிபதி சுமூகமாகக் கலந்து ரையாடினார்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் நேற்றுக் காலை ஜயஸ்ரீ மஹா போதியில் வழிபாட்டில் ஈடுபட்டார்.

அடமஸ்தானாதிபதி கலா நிதி வணக்கத்திற்குரிய பல் லேகம சிறிநிவாச தேரரை சந்தித்து அவரிடம் நலன் விசா ரித்த பிரதமர், தேரரிடம் ஆசீர் வாதம் பெற்றுக்கொண்டார்.

இந்த சந்தர்ப்பத்தில் பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ மற்றும் காணி அமைச்சர் எஸ்.எம்.சந் திரசேன, வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ். எம்.ரஞ்சித் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

# மக்கள் அணிதிரண்டு வீதிக்கு வந்தால் அமெரிக்காவுக்கு ஓடவேண்டி ஏற்படும்

## சபையில் கூறினார் குமார வெல்கம

கொழும்பு, நவ. 20

“பாராளுமன்றத்தில் எம்.பிக் களின் எண்ணிக்கை முக்கிய மல்ல பெரும்பான்மை ஆதரவு என்பதும் முக்கியமல்ல. ஆனால், மக்கள் அணிதிரண்டு வீதிக்கு வந்தால் அனைத்தையும் சுருட் டிக்கொண்டு அமெரிக்காவுக்கு ஓடவேண்டி வரும்” என பாராளு மன்ற உறுப்பினர் குமார வெல் கம தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கருத்து தெரிவிக் கும்போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

முறையாக செயல்படாவிட் டால் தோல்வியை சந்திக்க நேரிடும் என்பதை ஐக்கிய மக் கள் சக்தியினர் அவர்களின் ஆர்ப்பாட்டத்தினூடாக அர சாங்கத்துக்கு கற்பித்துள்ளனர். மக்கள் எதிர்ப்பு எங்கிருந்து கிளம்பும் என்பது எங்களால் சரியாக குறிப்பிட முடியாது.

அரசாங்கத்திடம் 150, 130, 140 பெரும்பான்மை இருக்க லாம். விமல் வீரவன்ஸ சென் றால் 135 இருக்கும். தயாசிறி ஜயசேகர சென்றால் 127 இருக்கலாம். 127 உறுப்பினர் களையும் பார்க்க மக்களின் எதிர்ப்பு பலமானது. அவர்கள் அணிதிரளும்போது அனைத் தையும் சுருட்டிக்கொண்டு அமெ ரிக்காவுக்குச் செல்ல நேரிடும்.

கடந்த நல்லாட்சி அரசாங் கத்தில் பொய்யான எப்.சி.ஐ.டி ஒன்றை நியமித்து அப்போது எதிர்த் தரப்பிலிருந்த பாராளு மன்ற உறுப்பினர்களை சிறைப் பிடித்தார்கள். அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வையும் சிறைப்பிடித்தார்கள். பல்வேறு சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்தார்கள். சிறையிலிருக்கும்போது அவரை நானும் நேரில் சென்று சந்தித்திருந்தேன். ஆகவே அவ ரின் மனதில் கட்டாயம் வைராக்கியம் இருக்கும்.

எது எவ்வாறாக இருந்தா லும் நான் மைத்திரிபால சிறி சேனவிடமும் செல்லவில்லை. ரணில் விக்ரமசிங்கவிடமும் செல்லவில்லை. பணம் செல வானாலும் என் மீது தாக்கல் செய்யப்பட்ட சகல வழக்கு களையும் தைரியமாக எதிர் கொண்டேன். ஆனால், தற் போதுள்ளவர்கள் பயங்கொண் டவர்கள். தற்போதுள்ளவர்கள் வெளியில் சென்று ஒன்றை கூறு கிறார்கள். மறுபுறம் பொலி ஸார் கைதுசெய்ய வருகிறார்கள் என்கிறார்கள் - என்றார். (அ)

# சிறப்பு தேர்ச்சி பெறும் மாணவருக்கு தங்கப்பதக்கம் வழங்க சீ.ஏ சிறிலங்காவுடன் யாழ்.பல்கலைக்கழகம் உடன்படிக்கை

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்துக் கும், இலங்கை பட்டயக் கணக் காளர் நிறுவனத்துக்கும் இடை யிலான புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடாதி பதி பேராசிரியர் பா. நிமல தாசன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குண ராஜாவும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவரும், பட் டயக் கணக்காளருமான மனில் ஜெயசிங்கவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒப்பமிட் டனர்.




கைச்சாத்திடப்பட்ட ஒப் பந்தத்தின்படி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக, முகா மைத்துவ பீடத்திலுள்ள கணக்கியல், நிதிமுகாமைத்து வம் மற்றும் வணிகம் (கணக்கி யலும், நிதியும்) ஆகிய துறை களில் பயின்று சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் பட்டமளிப்பு விழாவின்போது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறு வனத்தினால் தங்கப்பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. (அ-03)

## ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’

# பிரச்னை ஜனாதிபதி செயலணியா? தலைவராக நியமிக்கப்பட்டவரா?

■ **எம் எல் எம் மன்சூர்**

**ஆர்**. எஸ். எஸ். / பிஜேபி சித்தாந்தத்தின் முன்னணிப் பரப்புரையாளர் சுப்பிரமணியம் சுவாமியின் கொழும்பு விஜயம் இடம்பெற்று ஒரு வார காலத்திற்குள் ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியை நியமனம் செய்யும் முக்கியமான முடிவை அரசாங்கம் எடுத்திருக்கின்றது. சுவாமி ராஜபக்ஷக்களின் நெருங்கிய நண்பர் மற்றும் ஆலோசகர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்மத்தை பரப்புவதற்கு இப்பொழுது இலங்கையில் ஓர் உசிதமான சூழல் நிலவி வருவதும் அவருக்குத் தெரியும்.

ஆகவே, சுவாமியின் கொழும்பு விஜயத்தையும், அரசாங்கம் எடுத்திருக்கும் இந்த முக்கியமான முடிவையும் வெறுமனே தற்செயல் நிகழ்வுகளாக பார்க்க முடியாதுள்ளது. எல்லாவற்றையும் ஒரு பெரிய திட்டத்தின் உள்ளார்ந்த பாகங்களாகவே பார்க்க வேண்டியிருக்கின்றது. ஆர்எஸ்எஸ்ஃ விஸ்வ ஹிந்து பரிஷத் ஃ பஜ்ரங் தள் போன்ற (பிஜேபியின் பினாமி) அமைப்புக்கள் வட இந்தியா நெடுகிலும் முன்னெடுத்து வரும் அதே பாணியிலான முஸ்லிம் எதிர்ப்புப் பிரசாரங்களையே இலங்கையில் பொதுபல சேனா கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது.

‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ என்ற சுலோகம் நேரடியாக முஸ்லிம்களை இலக்கு வைத்து, சிங்கள ஊடகங்களினால் உருவாக்கப்பட்ட ஒரு கோஷம். அத்துரலியே ரத்தன தேரர் போன்றவர்களின் பரப்புரைகள் காரணமாக சிங்கள மக்களின் பொதுப்புத்தியில் ஊன்றச் செய்யப்பட்ட ஒரு கருத்து.

அதாவது, ‘ இலங்கையின் சட்டங்கள் வேறு எந்த மதத்தினருக்கும் இல்லாத விசேட சலுகைகளையும், உரிமைகளையும் முஸ்லிம்களுக்கு வழங்கியிருக்கின்றன’ என்ற ஒரு தப்பெண்ணத்தை அவர்கள் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கியிருக்கிறார்கள். இந்தச் சுலோகமும் ‘தேசிய பாதுகாப்பு’ என்ற வார்த்தையும் சிங்கள ஊடகங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான குறியீடுகளாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ‘தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்’ என்ற வார்த்தை உச்சரிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சாதாரண சிங்கள மக்கள் இச்சொல்லுடன் ‘இஸ்லாமிய தீவிரவாதம்’ என்ற சொல்லையும் சேர்த்தே வாசிக்கின்றார்கள். அப்படித்தான் அவர்களது பொதுப்புத்தி கட்டமைக்கப்பட்டிருக்கின்றது.

‘தொல்பொருள்களின் பாதுகாப்பு’ என்ற சொல்லையும் கூட மறைமுகமான சிறுபான்மை எதிர்ப்புத் தொனியிலேயே சிங்கள ஊடகங்கள் பயன்படுத்தி வருகின்றன.

அந்தப் பின்புலத்திலேயே, 2019 ஜனாதிபதி தேர்தலின் போது கோட்டாபய ராஜபக்ஷ ‘நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு பொதுவான சட்டம்’ என்ற சுலோகத்தை ஒரு தேர்தல் வாக்குறுதியாக முன்வைத்திருந்தார். இப்பொழுது அதற்கான செயலணியை நியமனம் செய்திருக்கின்றார். இந்நகர்வு எதிர்பாராத விதத்தில் தூண்டிவிட்டிருக்கும் கடும் எதிர்ப்பலைகள் ஜனாதிபதியையும், அவருடைய அரசாங்கத்தையும் ஓரளவுக்கு நிலைகுலையச் செய்துள்ளன.

“ஐந்து ஆண்டுகளுக்கும் மேல் ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ என்ற விடயம் தொடர்பாக தொடர்ந்து பேசி வந்திருப்பவர் கலகொட அத்தே ஞானசார தேரர். எனவே, இந்தச் செயலணிக்கு அவரைத் தலைவராக நியமித்ததில் என்ன தவறு?” என்று கேட்கிறார் ஜனாதிபதி.

நல்ல கேள்வி. அதாவது, ‘ஒருவர் அதீத ஆர்வம் காட்டி வரும் ஒரு பிரச்னையை பரிசீலனை செய்து, தீர்த்து வைப்பதற்குத் தேவையான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு பொருத்தமான ஆள் அவரைத் தவிர வேறு யார்?’ என்ற கருத்துப் பட பேசியிருக்கிறார் அவர்.

இந்தச் செயலணிக்கு தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பரவலாக முன்வைக்கப்பட்டிருக்கும்எதிர்ப்பு மற்றும் கண்டனங்கள் என்பவற்றின் மையக் கருவாக இருப்பது 'Conflict of Interests’ என்ற கோட்பாடு. இராணுவத்தில் ஒரு மூத்த அதிகாரியாக பணியாற்றியிருக்கும் ஜனாதிபதி நிச்சயமாக அதனை அறிந்திருப்பார்.

ஞானசார தேரரின் தலைமையிலான செயலணி தொடர்பாகவும் பல தரப்பினரும் இதேவாதத்தைத் தான் முன்வைத்திருக்கின்றார்கள். ஜனாதிபதியின் கடும் சிங்கள - பௌத்த நிலைப்பாட்டின் முக்கியமான ஆதரவாளர்களில் ஒருவரான தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க இந்தச் செயலணிக்கு தனது கண்டனத்தைப் பதிவு செய்திருப்பதுடன், ‘நாட்டின் சட்டங்களை மீறியிருக்கும் ஒருவரிடம் எப்படி புதிய சட்ட வரைவுகளை தயாரிக்கும் பணியை ஒப்படைக்க முடியும்” எனக் கேள்வியெழுப்பியிருக்கின்றார். அவர் வெளிப்படுத்தியிருக்கும் கரிசனை, ஞானசார தேரரின் தலைமையில் இயங்கும் ஒரு செயல ணியின் அறிக்கையை தேசிய ரீதியிலோ அல் லது சர்வதேச ரீதியிலோ ‘சந்தைப்படுத்த’ முடியாமல் போகும் என்ற தர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். ஏனென்றால், அத்தகைய அறிக்கை ஒன்றுக்கு எந்த ஒரு தரப்பிலிருந்தும் அங்கீகாரம் (Legitimacy) கிடைக்க மாட்டாது.



இதில் முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டிய மற்றொரு விடயம் ஜனாதிபதியின் இந்த முடிவுக்கு சிங்களத் தரப்பிலிருந்து எதிர்ப்பு தெரிவித்தவர்களில் பெரும்பாலானவர்கள் ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ என்ற கருத்தை எதிர்க்கவில்லை அதற்கு மாறாக, இச்செயலணியின் தலைவர் தொடர்பாகவே அவர்கள் தமது எதிர்ப்பை பதிவு செய்திருக்கிறார்கள் என்பதாகும்.

இலங்கை அரசியலின் இரண்டு பிரதான அணிகளுக்கு அப்பால் ஒரு மூன்றாவது அணியின் தேவையை வலியுறுத்தி, அதற்கென தொடர்ந்து பரப்புரைகளை மேற்கொண்டு வரும்நாகானந்த கொடிதுவக்கு போன்ற வர்களும் கூட அதே நிலைப்பாட்டிலேயே இருக் கின்றார்கள்.

‘இந்தச் செயலணியை முஸ்லிம்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் இதற்கு தனது கடுமையான எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றது- சமூக ஊடகங்களில்இதனை மிகத் தெளிவாக பார்க்க முடிகின்றது” என்று சொல்லும் கொடிதுவக்கு முத்தாய்ப்பாக இப்படிச் சொல்கிறார்: ‘ஆனால், காதி நீதிமன்றங்கள் போன்ற முஸ்லிம் சமூகம் சம்பந்தப்பட்ட சட்ட அமைப்புக்கள் பெரும் ஊழல் கிடங்குகள். பெண்களை பெருமளவுக்கு அலைக்கழித்து வருபவை. எனவே, அவை ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருந்து வர முடியாது.”

ஆகவே, இங்கு இலங்கை முஸ்லிம் சமூகம் தெளிவாகப் புரிந்து கொண்டு, மிக மிகக் கவனமாககாய் நகர்த்த வேண்டிய விடயம் ஞானசார தேரரின் செயலணிக்கான எதிர்ப்பு அந்தச் செயலணி பரீசீலனைக்கு எடுத்து, பரிந்துரைகளை முன்வைக்க வேண்டிய பிரச்னையை அடிப்படையாகக் கொண்டு தோன்றியிருக்கவில்லை மாறாக, பொருத்தமற்ற ஒரு நபர் இதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்ற விடயத்தின் அடிப்படையிலேயே இந்த எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன என்பதாகும்.

இந்தச் செயலணியின் இறுதி அறிக்கையை எழுதப் போகிறவர் நிச்சயமாக ஞானசேர தேரர் அல்ல் 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி ஒப்படைக்கப்பட வேண்டிய இந்த அறிக்கை, ஒரு வேளை, ஏற்கனவே எழுதப் பட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ என்ற கோஷம் இலங்கைக்கு புதியதாக இருந்து வந்தாலும்கூட, இந்தியாவில் கிட்டத்தட்ட கடந்த 70 ஆண்டு காலம் அது முன்வைக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், அந்த வார்த்தைக்குப் பதிலாக அவர்கள் ‘அனைவருக்குமான பொது சிவில் சட்டம்’ (Uniform Civil Code) என்ற சொல்லை பயன்படுத்தி வருகின்றார்கள்.

இந்தியாவில் 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற லோக் சபா தேர்தலின் போது பிஜேபி யின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் (இலங்கையில் போலவே) ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ என்ற வாக் குறுதி உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனால், ஜனநாயகத்திற்கான வெளி எல்லா தரப்புக்களுக்கும் பரவலாக திறந்து வைக்கப்பட்டிருக்கும் இந்தியா போன்ற ஒரு நாட்டில் அதனை (இலங்கையில் போல) அடாவடித் தனமாக அமுல் செய்வது என்பது இன்றைய சூழ் நிலையில் நினைத்துப் பார்க்கமுடியாத ஒரு காரியம்.

(இலங்கையின் ஜம்மியத்துல் உலமா சபைக்கு இணையான) அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் (All India Muslim Personal Law Board) கடுமையான விமர்சனங்களுக்கு மத்தியிலும், இந்தப் பிரச்னையில் முக்கியமான ஒரு வகிபாகத்தை வகித்து வருகின்றது. இலங்கையில் போல் அன்றி, அந்தச் சபையில் உலமாக் கள் தவிர கல்விமான்கள், அரசியல்வாதிகள், சட்டத்தர ணிகள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் பெண்கள் ஆகிய தரப்பினரும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தியாவில் அமுல் செய்ய முடியாதிருக்கும் ஒரு சட்ட ஏற்பாட்டை இலங்கையில் எளிதில் அமுல் செய்ய முடியுமென சுப்பிரமணியம் சுவாமி போன்றவர்கள் நினைக்கிறார்கள் போலும். இந்தச் செயலணியின் தன்னிச்சையான பரிந்துரைகள் சிறுபான்மை சமயக் குழுவினரின் ஒப்புதலை பெறாத விதத்தில் அமுல் செய்யப்பட்டால், அது அபரிமிதமான அதிகாரங்களை கொண்டிருக்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு இலங்கை செலுத்த வேண்டிய ஒரு விலையாகவே இருந்து வரும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அநேகமாக அப்படியொரு நிலைமை உருவாக மாட்டாது என்றே தோன்றுகிறது.

இந்தச் செயலணி தொடர்பான தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி இப்பொழுது பெருமளவுக்கு தளர்த்திக் கொண்டுள்ளார் என்பது இங்கு மிக முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயம். கடந்த வெள்ளிக்கிழமை அவருக்கும், அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர்களுக்கிடையில் நிகழ்ந்த கருத்துப் பரிமாற்றம் தொடர்பாக ஊடகங்களுக்கு கசியவிடப்பட்டிருக்கும் செய்திகளின் பிரகாரம், ஞானசார தேரர் தலைமையிலான செயலணி தொடர்பாக சிறுபான்மை - குறிப்பாக முஸ்லிம் - மக்களுக்கு மத்தியில் ஏற்பட்டிருக்கும் பீதியை பெருமளவுக்கு தணிக்கும் விதத்தில் ஜனாதிபதி பேசியிருக்கின்றார். ஜனாதிபதியுடன் அவருடைய செயலாளர் பி.பி. ஜயசுந்தர மற்றும் ஆலோசகரான மூத்த சிவில் சேவை அதிகாரி லலித் வீரதுங்க ஆகியோர் மட்டுமே இச்சந்திப்பில் பங்கேற்றிருக்கின்றார்கள். அச்சந்தர்ப்பத்தில் அலி சப்ரி முன்வைத்த ராஜினாமா கடிதத்தை ஏற்றுக் கொள்வதற்கு கடுமையாக மறுப்புத் தெரிவித்த ஜனாதிபதி, அவரிடம் இப்படிக் கூறியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன:

‘நான் ஜனாதிபதி செயலணியை நியமனம் செய்தமை தொடர்பாக தவறான புரிதலே உங்களுக்கும், பலருக்கும் ஏற்பட்டுள்ளது. நான் அச்செயலணியை நியமித்தது ‘ஒரே நாடு - ஒரே சட்டம்‘ என்ற விடயம் தொடர்பான தெளிவை எனக்குப் பெற்றுக் கொள்வதற்காக. அந்தச் செயலணியானது சட்டவாக்கத் துறைக்கு பரிந்துரைகளை செய்யாது. அது தனது அவதானங்களை எனக்கு பரிந்துரைக்கும். அதன் பின்னர், சட்டவாக்கத் துறை விரும்பினால் புதிய அரசியலமைப்பில் அவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆகவே, செயலணி சட்டவாக்கத்தின் சுயாதீனத்தில் தலையீடு செய்ய மாட்டாது.”

இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் பொழுது, எம்மால் ஒரேயொரு முடிவுக்கே வர முடியும். அதாவது, உள்நாட்டு கள நிலவரங்களை கருத்தில் கொண்டு சில கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் ஜனாதிபதி இருந்து வருகிறார் என்பது தெரிகிறது. அதே வேளையில், அத்தகைய முடிவுகள் எடுத்து வரக் கூடிய பாரதூரமான பின்விளைவுகள் மற்றும் சர்வதேச மட்டத்திலான எதிர்வினைகள் என்பவற்றை கவனத்தில் எடுத்து, ஞானசார தேரர் மற்றும் ரத்தன தேரர் போன்றவர்கள் எடுத்து வர விரும்பும் அதிரடி மாற்றங்களை தள்ளி வைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் அவருக்கு ஏற்படும்.

எப்படிப் பார்த்தாலும், 2022 ஆம் ஆண்டு இலங்கை அரசியலில் எதிர்பாராத திருப்பங்களும், அணி மாற்றங்களும், பாரிய கொந்தளிப்புக்களும் இடம்பெறக் கூடிய ஒரு ஆண்டாக இருந்து வரும் என்பதனையே இன்றைய போக்குகள் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன.

**அரங்கம்**

> **“உள்நாட்டு கள நிலவரங்களை கருத தில் கொண்டு சில கடுமையான முடிவு களை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத் தில் ஜனாதிபதி இருந்து வருகிறார். அதே வேளை, அத்தகைய முடிவுகள் கொண்டு வரக்கூடிய பாரதூரமான பின்விளைவுகள் மற்றும் சர்வதேச மட்டத்திலான எதிர்வினைகளை கவ னத்தில் எடுத்து, ஞானசார தேரர் மற் றும் ரத்தன தேரர் போன்றவர்கள் எடுத்து வர விரும்பும் அதிரடி மாற் றங்களை தள்ளி வைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் அவருக்கு ஏற்படும்.**

■ நியூசிலாந்து சிற்சபேசன்

**நியூசிலாந்தைப் போன்றே அவுஸ்திரேலியாவும் சர்வதேச எல்லைகளை மூடியுள்ளது. ஆனாலும், நியூசிலாந்துடனான கட்டுப்பாடுகளற்ற பயணங்களை மீள ஆரம்பிப்பதிலே அவுஸ்திரேலியா வேகமாகச் செயல்பட்டது. ஆனால் நியூசிலாந்து தயங்கியது. அவுஸ்திரேலியாவுடனான கட்டுப்பாடுகளற்ற பயணத்தை தயக்கத்துடனேயே நடைமுறைப்படுத்தியது.**




# நியூசிலாந்து எதிர்ப்பு பேரணிகளின் இரவல்முகம்

பூமிப்பந்தெங்கும் கொரோனாப் பேரிடர் புதிய அனுபவங்களை ஏற்படுத்துகின்றது. அதிர்ச்சி, அச்சம், அங்கலாய்ப்பு, ஆத்திரம், இழப்பு, விரக்தி எனப் பல்வேறு கட்டங்களை மக்கள் எதிர்கொள்கின்றனர். பாரதியின் வரிகளில் சொல்வதானால், நான் வீழ்வேனென்று நினைத்தாயோ? என மானிடம் சவால் விடுகின்றது. பேரிடரிலிருந்து மீள்வதற்கான வழித்தடத்தை தேடுகின்றது. இத்தகையவொரு காலகட்டத்திலேயே, பசுபிக் சமுத்திரத்தின் தென்கோடியிலுள்ள சின்னஞ்சிறு தேசமான நியூசிலாந்து, கொரோனாப் பேரிடரின் கோரமுகத்தைக் காணத்தொடங்கியுள்ளது.

வடதுருவத்தில் சூரியன் உதிக்கும்போது, தென்துருவத்தில் இருள் தாலாட்டுப்படலத்தை ஆரம்பிக்கின்றதல்லவா. அதேபோன்றே, சுமார் பன்னிரண்டு மாதங்களுக்கு முன்னர் கொரோனாப்பேரிடரிலே வடதுருவம் திணறிய இடத்துக்கு, தென்துருவத்திலுள்ள நியூசிலாந்து தற்போது வந்துசேர்ந்திருக்கின்றது. ஒரே வேறுபாடு, கொரோனாத் தொற்றுக்கு எதிரான யுக்தியாக தடுப்பூசி தற்போது கருதப்படுகின்றது.

ஊரொன்றின் வயல்கோடியில் அமைந்த வீடொன்றில் வசிப்போரை, ஊரின் சலசலப்புக்கள் அதிகமாகப் பாதிப்பதில்லையல்லவா. அதேபோன்றே, பல்வேறு தேசங்களும் கொரோனாப் பேரிடரிலே திணறியபோது, நியூசிலாந்து அதீதமான பாதிப்புக்களை எதிர்கொள்ளவில்லை. எல்லைகளை மூடிக்கொண்டது. அதனால் வெளிநாடுகளிலிருந்து ஏற்படக்கூடிய தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்திக்கொண்டது. உள்நாட்டில் சமூகப்பரவல் ஏற்படாமல் பாதுகாத்துக்கொண்டது. அந்தவகையிலே, கொரோனாத் தொற்றை இல்லாதொழிப்பதில் (எலிமினேஷன்) பெருமளவில் வெற்றியும் பெற்றது. இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட வில்லை. அதனால், கொரோனாப் பேரிடரை லாவகமாகக் கையாள்கின்ற தேசமாகப் பரவலாகக் கருதப்பட்டது.

கொரோனப் பேரிடரைக் கையாள்வதில் நியூசிலாந்தின் பூகோள அமைவிடமும் ஏதுவாகின்றது. அதே வேளையில், தேசபரிபாலனத்தின் ஆரோக்கியமான இயங்குதன்மையும் பங்களிக்கின்றது. அதிலே, அரசு மக்களுடன் கொண்டிருக்கின்ற தொடர்பாடலின் உயிர்புத்தன்மை குறிப்பிடத்தக்கதாகும். அரசினுடைய தொடர்பாடல் எளிமையாக அமைகின்றது. அதிலே எளிமையான சொல்லாடல்களே பயன்படுத்தப்படுகின்றன. அதனால் சொல்லப்படுகின்ற செய்திகள் மக்களுக்குத் தெளிவாகக் கிடைக்கின்றன. ஐந்து மில்லியன் மக்களின் ரீம் (குழு), பபிள் (ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரே இடத்தில் வசிப்பவர்களைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டசொல்), சமூக இடைவெளி, முகக்கவசம், தனிமைப்படுத்தல் போன்றவை பேரிடர் காலத்திலே மந்திரச்சொற்களாகின.

பொது மக்களுடனான தொடர்பாடலிலே தோழமையின் சாயலே தென்படுகின்றது. உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதில்லை. அரசினுடைய நடவடிக்கைகள் தொடர்பிலே போதிய விளக்கங்கள் வழங்கப்படுகின்றன. அதனால், அரசு ஏற்படுத்திய கட்டுப்பாடுகளை பொதுமக்கள் ஏற்றுக்கொள்கின்றனர். அந்தவகையிலேயே, பொதுமுடக்க நடைமுறைகளை இறுக்கமாகப் பேணிக்கொள்ள முடிந்தது. உலகிலேயே மிகக்கடுமையான பொதுமுடக்க நடைமுறை நியூசிலாந்தில் காணப்பட்டதாகப் பரவலாகக் கருதப்படுகின்றது. அத்தகைய பொதுமுடக்கத்தை நடைமுறைப்படுத்துவதில் மிதமிஞ்சிய சவால்கள் இருக்கவில்லை.

கொரோனாத்தொற்றுக்கு எதிரான யுக்தியாக, சர்வதேச எல்லைகளைத் தொடர்ச்சியாக மூடிவைத்திருக்கமுடியாது என்பது காலப்போக்கில் யதார்த்தமாகியது. ஆகக்குறைந்தது, அண்டைநாடான அவுஸ்திரேலியாவுடனான எல்லைகளிலேயேனும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவேண்டிய சூழ்நிலை உருவாகியது.

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து தேசங்களிடையேயான ஊடாட்டம் கணிசமானதாகும். ஒருநாட்டின் குடியுரிமை கொண்டோர் மற்றைய நாட்டில் நிரந்தரமாக வசிக்கலாம். பயணிப்பதற்கு விசா தேவையில்லை. பல குடும்பங்களின் உறுப்பினர்கள் தாஸ்மன் கடலுக்கு இரு மருங்கிலேயும் உள்ளனர். அதனால் குடும்பங்களின் போக்குவரவு உள்ளது. பல நிறுவனங்களின் செயல்பாட்டுக்கு இரு நாடுகளிடையேயான போக்குவரவு அவசியமானதாகும். மேலதிகமாக, இவ்விரண்டு தேசங்களின் உல்லாசப் பயணத்துறையும் பரஸ்பரம் பயனடைகின்றது.

நியூசிலாந்தைப் போன்றே அவுஸ்திரேலியாவும் சர்வதேச எல்லைகளை மூடியுள்ளது. ஆனாலும், நியூசிலாந்துடனான கட்டுப்பாடுகளற்ற பயணங்களை மீள ஆரம்பிப்பதிலே அவுஸ்திரேலியா வேகமாகச் செயல்பட்டது. ஆனால் நியூசிலாந்து தயங்கியது. அவுஸ்திரேலியாவுடனான கட்டுப்பாடுகளற்ற பயணத்தை தயக்கத்துடனேயே நடைமுறைப்படுத்தியது.

மெல்பேர்ன் - சிட்னியில் டெல்டா பரவல் ஏற்பட்டபோது சூழ்நிலையை நியூசிலாந்து கவனித்துக்கொண்டிருந்தது. இரு நாடுகளிடையேயான கட்டுப்பாடுகளற்ற போக்குவரத்தினால் தொற்றுப்பரவல் வாய்ப்பு அதிகரித்துக் காணப்பட்டது. ஒகஸ்ட் மாதத்தில் அச்சம் பலித்துவிட்டது. முதலாவது டெல்டா பரவல் ஆக்லாந்தில் ஏற்பட்டது. சிட்னியிலிருந்தே டெல்டா பரவல் ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

டெல்டாவின் வருகை புதிய சூழ்நிலைகளை ஏற்படுத்தின. டெல்டா கட்டுப்படவில்லை. சமூகப்பரவலை இல்லாதொழிக்க முடியவில்லை. தொற்று எண்ணிக்கை பாம்பும்ஏணியும் விளையாட ஆரம்பித்தது. பொதுமுடக்கம் சலிப்பை ஏற்படுத்தியது. அதனால் மக்களிடையே எதிர்ப்புணர்வு துளிர்விட்டது. பொதுமுடக்கத்துக்கு எதிரான பேரணிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தென்பட்டன.

பெருந்தொற்றைக் கையாளும் அணுகுமுறையை அரசு மாற்றியது. தொற்றை இல்லாதொழிக்கும் (எலிமினேஷன்) மூலோபாயம் செல்லாக்காசாகியது. தொற்றைக் கட்டுப்படுத்துவதே (சஃப்பிரஷன்) பேசுபொருளாகியது தொற்றுப்பரவலுக்கு எதிராகத் தடுப்பூசியே முக்கிய யுக்தியாகியது. பொதுமுடக்கம் படிப்படியாகத் தளர்த்தப்பட்டது.

அதன்பின்னரேயே, பொதுமுடக்கத்துக்கு எதிரான பேரணிகள் அதிகரித்தன. அஃது ஒருவகையில் வேடிக்கையானதாகும். ஏனெனில், பொதுமுடக்கம் தொடர்பான கட்டுப்பாடுகள் உச்சப்பட்சமாகக் காணப்பட்டபோதெல்லாம் எதிர்ப்புப் பேரணிகள் நடைபெறவில்லை. அன்றைய காலத்தில், கொரோனாப் பேரிடரை எதிர்கொள்ள தேசமே ஓரணியில் திரண்டிருந்தது.

பொதுமுடக்கத்தில் தளர்வுகள் ஆரம்பமாகிய பின்னர் அதிகரித்த எதிர்ப்புப் பேரணிகளின் உள்நோக்கமே சந்தேகத்திற்கு உள்ளாகின்றது. வலதுசாரி சிந்தனை சார்ந்த கோஷங்களையே பேரணிகளிலே அதிகமாகக் காணமுடிகின்றது. முன்னாள் அமெரிக்கா ஜனாதிபதி டிரம்பின் படங்கள், ஹிட்லரின் நாசி அடையாளங்கள், முன்னொரு காலத்தைய தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கை சார்ந்த பிம்பங்கள் போன்றவையும் பேரணிப் பதாதைகளில் இடம்பிடிக்கின்றன. அதனாலேயே, நியூசிலாந்துக்கு வெளியேயிருந்தே எதிர்ப்புணர்வு தூண்டப்படுவதான சமிக்ஞைகள் கிடைக்கின்றன.

கலகத்தை உருவாக்குவதே இத்தகைய பேரணிகளின் நோக்கமாகக் கருதமுடிகின்றது. அதற்காகக் காரணங்கள் தேடப்படுகின்றன. பேரிடர்காலத்திலே ஏற்படுகின்ற சோர்வு ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றது. அதனால் பரந்துபட்ட சமூகத்தின் கவனத்தைப் பெறுவதில்லை. அதுவே, எதிர்ப்புப்பேரணிகளின் பெறுமதியை மழுங்கடிக்கின்றன. அந்தவகையிலேயே, பேரணிகளின் இரவல் முகம் பட்டவர்த்தனமாக வெளிப்படுகின்றது. ■



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்

35. வறள்நிலப் பிரதேசங்களில் வளரும் தாவரங்களைக் கொண்ட தொகுதி
   (1) வாழை, கமுகு, கங்கூன்
   (2) பிரண்டை, கள்ளி, கற்றாளை
   (3) தென்னை, இலந்தை, கொகில

36. செயற்பாடு ஒன்றிற்காக தரம் 5 மாணவர்கள் திறந்த வெளியில் காணப்பட்ட புல்லினை தகரம் ஒன்றினால் மூடி சில நாட்களின் பின் திறந்து பார்த்தனர். அப்போது அவர்களால் அவதானிக்க முடிந்தது யாது?
   (1) புற்கள் பச்சை நிறமாகக் காணப்பட்டன.
   (2) புற்கள் கரும் பச்சை நிறமாகக் காணப்பட்டன.
   (3) புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன.

37. பின்வருவனவற்றுள் ஈருடக வாழி எது?
   (1) ஆமை (2) முதலை (3) தவளை

38. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி அல்லாதது?
   (1) சுண்டெலி (2) கலவத்தன் (3) வரிக்குதிரை

39. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் ஒழுங்குமுறை
   (1) குடம்பி - முட்டை - கூட்டுப்புழு - நிறையுடலி
   (2) முட்டை - குடம்பி - கூட்டுப்புழு - நிறையுடலி
   (3) குடம்பி - கூட்டுப்புழு - முட்டை - நிறையுடலி


40. "சகல சௌபாக்கியங்களையும் கொண்ட தன்னிறைவான, இந்நாட்டில் சூரியனும் சந்திரனும் நிலைத்திருக்கும் காலமெல்லாம் தார்மீகத்தைக் காத்தவாறு நாட்டுமக்கள் யாவரும் இருப்பார்களாக." இதை உணர்த்துவது இலங்கையின்
   (1) தேசிய விளையாட்டு (2) தேசியக் கொடி (3) தேசிய இலச்சினை

41. சப்பிரகமுவா, வடமத்திய ஆகிய இரு மாகாணங்களிலும் உள்ளடங்குகின்ற மாவட்டங்கள் முறையே
   (1) மொனராகலை, குருநாகல் (2) கேகாலை, அநுராதபுரம் (3) இரத்தினபுரி, மாத்தளை

42. எமது நாட்டில் பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் ஆகியோர் கொண்டாடும் பண்டிகைகள் முறையே
   (1) ஈஸ்ட்டர், ஹஜ்பெருநாள், புதுவருடப்பிறப்பு, பொசன்
   (2) புதுவருடப்பிறப்பு, தைப்பொங்கல், நவராத்திரி, வெசாக்
   (3) வெசாக், தீபாவளி, றம்ழான், பெரியவெள்ளி

43. குளத்தையும், கட்டுவித்த மன்னனையும் சரியாகக் கொண்டது
   (1) மின்னேரியா - 2ம் அக்போ
   (2) கலாவாவி - தாதுசேனன்
   (3) சேனநாயக்க சமுத்திரம் - பண்டுகாபயன்



44. இலங்கையில் காணப்படும் வணக்கத்துக்குரியது அல்லாத வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடம்
   (1) தலதாமாளிகை (2) திருக்கோணேச்சரம் (3) யாழ்ப்பாணக்கோட்டை

45. 
இப் போக்குவரத்துச் சமிக்ஞை குறிப்பது
   (1) பின்னே செல்லுங்கள்.
   (2) நிறுத்துங்கள்
   (3) பின்னாலிருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்.

46. வீதிச் சுற்றுவட்டங்களில் முதலில் எப்பக்கத்தில் இருந்து வரும் வாகனங்களுக்கு இடமளித்தல் வேண்டும்?
   (1) வலது புறத்தில் இருந்து வரும் வாகனங்களுக்கு.
   (2) எப்பக்கத்தால் வருவோரும் செல்ல முடியும்.
   (3) இடது புறத்தில் இருந்து வரும் வாகனங்களுக்கு.

47. பின்வருவனவற்றுள் தூய செயற்பாடு எனக் கூற முடியாதது?
   (1) மலசல கூடம் சென்றதன் பின்னர் சவர்க்காரம் இட்டு கைகழுவுதல்.
   (2) காலத்துக்குக் காலம் நகங்களை வெட்டிக் கொள்ளுதல்.
   (3) உணவு சமைக்கும் போது தலைமுடி, மூக்கைத் தொடுதல்.

48. வீடுகளினுள் வெளிச்சம், காற்றோட்டம் வருவதற்காக அமைக்கப்படுபவற்றுள் ஒன்று அல்லாதது எது?
   (1) வீட்டிற்கு ஓட்டினால் அமைக்கப்பட்ட கூரை அமைத்தல்.
   (2) யன்னல், நிலைகளின் மேற்பகுதியில் பூக்கல் அமைத்தல்.
   (3) வீடுகளில் யன்னல் அமைத்தல்.

49. **'நொருங்கக் கூடியது'** என்பதைக் குறிப்பது.
   (1)  (2)  (3) 

50. முற்காலத்தில் தானியங்களை மாவாக அரைப்பதற்கு எவ் உபகரணத்தைப் பயன்படுத்தினர்?
   (1) உரல் (2) ஆட்டுக்கல் (3) திரிகைக்கல்

51. ஊசித்துளைக் கமராவின் திரை செய்யப் பயன்படுவது
   (1) வெள்ளைத் திசுத்தாள் (2) தகரத்துண்டு (3) காட்போட் மட்டை

52. இலங்கையை ஆட்சி செய்த வெளிநாட்டவர்கள் ஒழுங்கு முறையில் அமைவது.
   (1) ஆங்கிலேயர் ஒல்லாந்தர் போர்த்துக்கீசர்
   (2) போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர்
   (3) இந்தியர் ஆங்கிலேயர் ஒல்லாந்தர்

53. நீரைத் தினமும் போதியளவு அருந்துவதால் உண்டாகும் நன்மைகளில் ஒன்று
   (1) உதடுகள் உலர்ந்து போதல்.
   (2) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாக இருக்கும்.
   (3) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்.

54. தேசியக்கொடிக் கமிட்டி, தேசியகீதக் கமிட்டி ஆகியவற்றில் அங்கத்தவராக இருந்து செயற்பட்டவர் யார்?
   (1) கொங்காலேகொட பண்டா (2) ஆதர். சி. கிளாக் (3) ரீ.பீ ஜாயா

# வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம்!

அம்பாந்தோட்டை, நவ. 20
அம்பாந்தோட்டை, வீரக்கெட்டிய தெலம்புயாய பிரதேசத்தில், காணாமல்போன குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வீரக்கெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீரக்கெட்டிய வேக்கந்தவல கேக்குனாய பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அலுத் பண்டாரகே தினேத் குமார (வயது - 44) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த செவ்வாய்க்கிழமை கடைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டிலிருந்து வெளியேறியுள்ளார்.

அதன் பின்பு அவர் வீடு திரும்பாததால் உறவினர்கள் அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் அந்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தில் வெட்டுக்காயங்கள் பல காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கும் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# நாட்டை மீண்டும் முடக்குவதே எதிர்க்கட்சியினரின் நோக்கம்

## நாலக்க பண்டார எம்.பி. குற்றச்சாட்டு

மாத்தளை, நவ. 19
நாட்டில் மீண்டும் ஒரு கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலை ஏற்படுத்தி நாட்டைச் செயலிழக்கச் செய்வதற்கே எதிர்க்கட்சி விரும்புகின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாலக்க பண்டார கோட்டேகொட தெரிவித்தார்.

மாத்தளை, கோட்டுவ வீதி அபிவிருத்திப் பணியை ஆரம்பித்த வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஒரு இலட்சம் வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் குறித்த வீதியானது 8.29 மில்லியன் ரூபா செலவில் காபட் வீதியாகப் புனரமைக்கப்படவுள்ளது.

தற்போதைய அரசு மக்களின் துயரங்களை நன்கு உணர்ந்துள்ளது. சில பிரச்னைகளுக்கு மிகக் குறுகிய காலத்தில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

மாத்தளை மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் பல வருடங்களாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. தற்போதே சரியான பாதையில் செல்கின்றது.

இவ்வாறான அபிவிருத்திப் பணிகளை நிறுத்திவிட்டு நாட்டு மக்களைப் பிரச்னைக்குள் தள்ள வேண்டும் என்பதே நாட்டின் பிரதான எதிர்க்கட்சியின் நோக்கமாகும்" - என்றார். (இ)

# பெரும் வறுமையை நோக்கி பயணிக்கின்றது இலங்கை

## எதிர்க்கட்சி கவலை



கொழும்பு, நவ. 20
**"சர்வதேச ஒத்துழைப்பும், அதற்கான வேலைத்திட்டமும், மனித உரிமைகளைப் பலப்படுத்துவதன் மூலமாக மட்டுமே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்."**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த அரசின் கீழ் மிகப் பெரிய பொருளாதார வீழ்ச்சி மட்டுமல்ல வறுமையின் பக்கம் நாடு பயணிக்கின்றது.

அரசு 'ஒரே நாடு- ஒரே சட்டம்' எனக் கூறினாலும், நாட்டில் சட்டம் என்பது இல்லாமல் போயுள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு ஏழு மூளைகள் இருக்கின்றன எனக் கூறினார்கள். அரசமைப்பையும் மாற்றி அதிகாரத்தைக் கைப்பற்றினர்.

அவ்வாறான நிலையில் இப்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் மோசமான, தோல்வி கண்ட வரவு - செலவுத் திட்டமாகும்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

சட்டவிரோதமாக பல விடயங்களை இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் முன்வைத்துள்ளார்" - என்றார். (இ)

# கொரோனா வைரஸ் பரவலை தீவிரப்படுத்த எதிரணி முயற்சி

## அரசுக்கு எதிரான போராட்டம் தொடர்பில் எஸ்.பி. சீற்றம்

கொழும்பு, நவ. 20
"ஐக்கிய மக்கள் சக்தியினரும் மக்கள் விடுதலை முன்னணியினரும் அரசுக்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபட்டு கொரோனா வைரஸ் பரவலைத் தீவிரப்படுத்த முயற்சிக்கின்றார்கள்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக உலக நாடுகள், பாடசாலைகளை மூடியதால் பெரும்பாலான மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தாக்கம் தொடர்பில் அரசு, சுகாதாரத் தரப்பினர், நாட்டு மக்கள் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிடும் ஆலோசனைகளைக் கருத்தில்கொள்ளாமல் எதிர்த்தரப்பினர் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகிறார்கள்.

கொரோனாவைக் கருத்தில் கொண்டு கடந்த இரண்டு வருடங்களாக உலகில் பெரும்பாலான நாடுகள் தொடர்ந்து முடக்கப்பட்டு பாடசாலைகளும் மூடப்பட்டன.

இந்தநிலையில், நாட்டையும் பாடசாலைகளையும் மூட வேண்டாம் என உலக உளவியல் நிபுணர்கள் உலக அரச தலைவர்களிடமும் அரசுகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

கொரோனாத் தாக்கத்தின் காரணமாக சுமார் இரு வருடகாலமாக எமது நாட்டு மாணவர்களின் கல்விச் செயல்பாடுகள் தடைப்பட்டிருந்தன.

புதுவருட கொரோனாக் கொத்தணி பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலைகள் கட்டம் கட்டமாகத் திறக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் கல்விச் செயல்பாடுகளில் ஆர்வமாக ஈடுபடுகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியினரும் மக்கள் விடுதலை முன்னணியினரும் அரசுக்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபட்டு கொரோனா வைரஸ் பரவலைத் தீவிரப்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

தேசிய வருமானம் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மிகவும் புத்திசாலித்தனமான முறையில், நாட்டு மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

அரச செலவு முகாமைத்துவம், அரச செயல்திட்ட வினைத்திறன், நிர்மாணிப்புக்களுக்காக மக்களை ஊக்கப்படுத்தல், சமுர்த்தி செயல்திட்டத்தை அபிவிருத்தி செயற்றிட்டமாக்கல் உள்ளிட்ட பல விடயங்கள் 2022ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. உற்பத்தி பொருளாதாரத்துக்காகப் பெருமளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தாக்கத்தால் இறக்குமதி பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அத்தியாவசியப் பொருள் உற்பத்திகளுக்கும் பெருமளவில் கேள்வி நிலவுகின்றது.

உலக சந்தையில் எரிபொருள், சமையல் எரிவாயு ஆகிய அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வடைந்துள்ளது. இந்தப் பிரச்னை இலங்கைக்கு மாத்திரம் வரையறுத்ததல்ல.

எமது நாட்டில் நீர், எரிவாயு, எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவை நிவாரண அடிப்படையில் வழங்கப்படுகின்றமை தவறானதாகும்.

பெற்றோலியம், மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் துறை ஆகிய பிரதான துறைகளில் காணப்படும் நட்டம் நாட்டின் அபிவிருத்திக்குப் பிரதான தடையாகக் காணப்படுகின்றது" - என்றார். (இ)

# உள்ளக முரண்பாடுகளை உடனடியாகக் கைவிடுக!

## கோப் குழுவின் தலைவர் வேண்டுகோள்

கொழும்பு, நவ. 20
உள்ளக முரண்பாடுகளை உடனடியாகக் கைவிட்டு அரசின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.



இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் நிறுவனத்தின் தலைவர் ஆகியோர் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அது அரசின் பயணத்துக்குத் தடையாக அமையும் என்றும் கோப் குழுக் கூட்டத்தில் அவர் கூறினார்.

கவனக்குறைவாக மற்றும் பொறுப்புடன் நடந்து கொள்ளாத அதிகாரிகள் தொடர்பில் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோப் குழுவின் தலைவர், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அநுராத விஜேகோனுக்குப் பணிப்புரை விடுத்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதில் காலதாமதம் காணப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டிய கோப் குழுவின் தலைவர், 2015 ஆம் ஆண்டு முதல் இலங்கை தேசிய இளைஞர் சேவை தனியார் நிறுவனம் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமை குறித்து கேள்வி எழுப்பினார்.

இந்த அறிக்கைகள் யாவற்றையும் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்குக் கோப் குழு பணிப்புரை விடுத்தது.

அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய மாத்தறை நில்வளா இளைஞர் பூங்காவை அமைப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டபோதும், இது தொடர்பில் சாத்தியக் கூற்று ஆய்வு மேற்கொள்ளப்படாமை குறித்தும் குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டது. (இ)

# சர்ச்சைக்குரிய விவசாய சட்டங்களை மீளப்பெற்றார் இந்திய பிரதமர் மோடி!

## விவசாயிகளின் ஒருவருட போராட்டத்திற்கு வெற்றி

புதுடில்லி, நவ. 20

இந்திய விவசாயிகளின் ஒரு வருட போராட்டத்திற்கு பின் சர்ச்சைக்குரிய 3 வேளாண் சட்டங்களையும் சட்டங்களை மீளப்பெறுவதாக அந்நாட்டு பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இந்தியா மூன்று வேளாண் சட்டங்களை அறிமுகப்படுத்தியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தலைநகர் டில்லியின் எல்லைகளில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் முகாம் அமைத்து போராடி வந்தனர். குளிர் மற்றும் கோவிட் தொற்றால் சிலர் இறந்தனர்.

இந்த மூன்று சட்டங்களும் விவசாயத்தில் தனியார் நிறுவனங்களின் நுழைவை அனுமதிக்கும் - இது விவசாயிகளின் வருமானத்தை பாதிக்கும் என்று கூறியே விவசாயிகள் எதிர்ப்பு வெளியிட்டனர்.

விவசாயிகளை அமைதிப்படுத்த அரசாங்கம் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. இந்நிலையில், விவசாயிகளுடன் பேசுவதற்கு அண்மைக்காலமாக அரசாங்கம் எந்த முயற்சியும் எடுக்காமலேயே சட்டங்களை மீளப் பெறுவதாக அறிவித்துள்ளது. நேற்று தேசிய தொலைக்காட்சி மூலம் அந்த நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோதே பிரதமர் மோடி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.



இதனை போராட்டத்துக்கு கிடைத்த பெரிய வெற்றியாக விவசாயிகள் பார்க்கின்றனர். எனினும், பஞ்சாப், உத்தரபிரதேசத்தில் இடம்பெறவுள்ள தேர்தலை கருத்தில் கொண்டே விவசாய சட்டங்கள் மீளப்பெறப்பட்டுள்ளன என்ற நிபுணர்கள் கூறுகின்றனர். பஞ்சாப்பில் பெரும்பான்மையானவர்கள் சீக்கியர்கள். சீக்கிய மதத்தை நிறுவிய குருநானக்கின் பிறந்தநாளை கொண்டாடும் நாளில் நேற்று அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த சட்டங்கள் விவசாயிகளுக்கு நன்மையானவை. ஆனால், அவர்களுக்கு அதை விளக்க பல முயற்சிகள் எடுத்தாலும் நாங்கள் தோல்வியடைந்தோம். இதனால் மூன்று விவசாய சட்டங்களையும் மீளப்பெற அரசாங்கம் முடிவு செய்துள்ளது. எனவே, விவசாயிகள் தமது பணிகளுக்கு திரும்ப வேண்டும் என்று தனது நேற்றைய உரையில் இந்திய பிரதமர் கூறியிருந்தார்.

இதேவேளை, சட்டம் மீளப்பெறப்படுவதற்கு இனிப்புகள் வழங்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர் விவசாயிகள். எனினும், சட்டம் மீளப்பெறுவது நடைமுறையாகும்வரை போராட்டம் நடைபெறும் இடங்களை விட்டு வெளியேறப்போவதில்லை என்று தெரிவித்தனர். (ஐ)



# கிறிஸ்மஸ்தீவில் செந்நண்டுகள் இலட்சக்கணக்கில் இடம்பெயர்வு

சிட்னி, நவ. 20

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவின் காடுகளில் இருந்து பல இலட்சக்கணக்கான செந்நண்டுகள் பெருங் கடலை நோக்கிய தங்கள் வருடாந்திர இடப்பெயர் வைத் தொடங்கியுள்ளன.

வழக்கமாக ஒக்ரோபர் - நவம்பர் மாதங்களில் பெய்யும் முதல் மழையின்போது பல இலட்சக் கணக்கான செந்நண்டுகள் இவ்வாறு இடம்பெயர்வது வழமையாகும்.

கிட்டத்தட்ட 5 கோடி செந்நண்டுகள் இவ்வாறு இடம்பெயரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு வீதிகள் மூடப்பட்டுள்ளன.

சில பகுதிகளில் நண்டுகள் இடையூறு இன்றி கடலை நோக்கி நகர்வதற்காக விசேட மேம்பாலங்கள் அமைக் கப்பட்டுள்ளன. திறக்கப்பட்டுள்ள வீதிகளில் நண்டுகள் சிக்கி உயிரிழக்காமல் பாதுகாக்கும் வகையில் மேலதிக தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தி, விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இனப் பெருக்கத்துக்குத் தயாராகும் காடுகளில் இருந்து இந்தக் காலப்பகுதியில் நண்டுகள் கடலை நோக்கி இடம் பெயர்வதாக விலங்கியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நண்டுகளில் இடம்பெயர்வைக் காண கிறிஸ்மஸ் தீவில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கூடியுள்ளனர். (ஐ)

# அதிக மருந்து பாவனையால் ஒரு இலட்சம் பேர் உயிரிழப்பு

நியூயோர்க், நவ. 20

மருந்துகளை அதிகமாக எடுத்துக்கொண்டதால் ஒரு வருட காலப்பகுதியில் மட்டும் அமெரிக்காவில் சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

தொற்று நோய் நெருக்கடிக்கு மத்தியில் இவ்வாறான மரணங்களில் எண்ணிக்கை முன்னொருபோதும் இல்லாத வகையில் புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கும் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இவ்வாறு ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட அமெரிக்கர்கள் இறந்தனர்.

இந்தச் செய்தி துயரமளிப்பதாகத் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், கோவிட் தொற்று நோய் நெருக்கடி இந்தப் பிரச்னையை மோசமடையச் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மருந்துகளை அதிகமாக எடுத்துக்கொண்டதால் அமெரிக்காவில் இறந்தவர்களின் எண்ணிக்கை கடந்த ஓராண்டுக்கு முன்னர் பதிவானதை விட 28.5 வீதம் அதிகரித்துள்ளதை புள்ளிவிபரங்கள் காட்டுவதாக அமெரிக்கா நோய்க் கட்டுப்பாட்டு, தடுப்பு மையம் தெரிவித்ததுள்ளது. (ஐ)

# உறுதிமொழியை மீறி பிரேசிலில் காடழிப்பு நடவடிக்கைகள் தீவிரம்

றியோடிஜெனிரோ, நவ. 20

பிரேசிலில் அமேசன் மழைக் காடுகளை அழிக்கும் நடவடிக்கை கடந்த 15 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு அதிகரித்துள்ளதாக உத்தியோகபூர்வ புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் காடழிப்பு, கடந்த வருடத்தை விட 22 வீதம் அதிகரித்துள்ளதாக பிரேசிலின் விண்வெளி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற சி. ஓ. பி. 26 காலநிலை உச்சிமாநாட்டில் 2030 ஆம் ஆண்டிற்குள் காடழிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதாக உறுதியளித்த பல நாடுகளில் பிரேசிலும் ஒன்றாகும். எனினும், அங்கு காடழிப்பு தீவிரமடைந்துள்ளமை கவலையை ஏற்படுத்தியுள்ளது.

பிரேசிலின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் உள்ள அமேசன் காடுகளில் சுமார் 30 இலட்சம் வகையான தாவரங்கள் மற்றும் விலங்குகள் உள்ளன. இந்தக் காடுகளில் சுமார் 10 இலட்சம் வரையான பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர்.

புவி வெப்பமடைதலின் வேகத்தை குறைப்பதில் அமேசன் காடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சமீபத்திய தரவுகளின்படி 2020-21 காலகட்டத்தில் சுமார் 13,235 சதுர கி.மீ. (5110 சதுர மைல்கள்) அமேசன் மழைக்காடுகாடுகள் அழிக்கப்பட்டன என்று தெரியவருகிறது.

கடந்த 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரே வருடத்தில் அதிகளவு காடுகள் நடப்பாண்டில் அழிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)






# லண்டனில் இலங்கையர் அதிகம் வசிக்கும் பகுதியில் தீ விபத்து

## இரு பெண்களும் இரு சிறுவர்களும் பலி

லண்டன், நவ. 20

லண்டனின் தென்கிழக்கு பகுதியில் இலங்கையர்கள் அதிகம் வசிக்கும் ஹமில்டன் வீதியில் ஏற்பட்ட தீ விபத்தில் நால்வர் உயிரிழந்தனர். இரு பெண்களும், இரு சிறுவர்களுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

வியாழக்கிழமை இரவு 8.30 மணி (உள்ளூர் நேரம்) பெக்ஸ்லிஹீத் - ஹமில்டன் வீதியில் முதலாவது மாடியில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

40 தீயணைப்பு வீரர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டபோதும் நால்வரின் உடல்களையே அவர்களால் மீட்க முடிந்தது.

எனினும், தீயணைப்பு வீரர்கள் வருவதற்கு முன்பு தீ விபத்து இடம்பெற்ற இடத்திலிருந்து வெளியேறிய ஒருவர் அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை இடம்பெற்று வருகின்றது.

விபத்து இடம்பெற்ற ஹமில்டன் வீதியில் இலங்கை வம்சாவளியினர் அதிகளவில் வசித்து வருகின்றனர். விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அந்தப் பகுதியில் புதிதாக குடியேறியவர்கள் என்று கூறப்படுகின்றது. (ஐ)



# ஓய்வை அறிவித்தார் ஏபி டி வில்லியர்ஸ்!

கேப்டவுன், நவ. 20

அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக ஏபி டி வில்லியர்ஸ் அறிவித்துள்ளார். இதன் மூலம் ஐ. பி. எல். தொடர் உட்பட அனைத்து வகையான இருபது - 20 தொடர்கள் அனைத்திலிருந்தும் அவர் ஓய்வு பெறுகிறார்.

360 பாகை என்று கிரிக்கெட் ரசிகர்களால் அழைக்கப்பட்டவர் டி வில்லியர்ஸ். தென்னாபிரிக்காவின் அதிரடி வீரரான இவர் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து 2018ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். ஆனால், அவர் ஐ. பி. எல்., பிக்பாஸ், சி. பி. எல். தொடர்களில் தொடர்ந்து விளையாடி வந்தார்.

இந்த நிலையில் தனது ஓய்வு அறிவிப்பை தனது ருவிட்டர் பக்கம் மூலமாக திடீரென அறிவித்தார். "நான் விளையாட்டை தூய்மையான சுவாரசியத்துடனும், கட்டுக்கடங்காத உற்சாகத்துடனும் விளையாடி வருகிறேன். 37 வயதில் என்னால் பிரகாசிக்க முடியவில்லை.", என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், அவரின் 17 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்வு முடிவுக்கு வந்துள்ளது.

முன்னதாக தென்னாபிரிக்கா அணிக்காக டி வில்லியர்ஸ், 114 டெஸ்ட் போட்டிகளில் 8765 ஓட்டங்களையும், 228 ஒருநாள் போட்டிகளில் 9577 ஓட்டங்களையும், 78 இருபது - 20 போட்டிகளில் 1672 ஓட்டங்களையும் எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டெஸ்ட் தலைவர் பதவியிலிருந்து விலகினார் ஆஸியின் ரிம் பெய்ன்

சிட்னி, நவ. 20

அவுஸ்திரேலியாவின் டெஸ்ட் அணித் தலைவர் ரிம் பெய்ன் தனது பதவியிலிருந்து திடீரென விலகியுள்ளார்.

ஆஷஷ் தொடருக்கான அணி அறிவிக்கப்பட்ட ஒரு சில நாட்களில், நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அவரின் இந்த விலகலுக்கு சக பெண் ஊழியர் ஒருவருக்கு பாலியல் சம்பந்தப்பட்ட மோசமான பதிவுகளை அவர் அனுப்பியமையே காரணம் என்று கூறப்படுகின்றது.

செய்தியாளர்களிடம் நேற்று அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-



அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதற்கான எனது முடிவை இன்று (நேற்று) அறிவிக்கிறேன். இது கடினமான முடிவு. ஆனால், எனக்கும் எனது குடும்பத்துக்கும் கிரிக்கெட்டுக்கும் சரியான முடிவு.

கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, நான் அப்போதைய சக ஊழியருடன் உரை பரிமாற்றத்தில் ஈடுபட்டேன். அந்த நேரத்தில், குறித்த உரை பரிமாற்றம் ஒரு முழுமையான அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகத்தின் ஒருஷமைப்பாடு பிரிவு விசாரணைக்கு உட்பட்டது. அதில் நான் முழுமையாக - வெளிப்படையாக பங்கேற்றேன் - என்றார்.

இது தொடர்பில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில்,

அவுஸ்திரேலிய ஆடவர் டெஸ்ட் அணியின் தலைவர் பதவியில் இருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையிலான தனது விலகலை ரிம் பெய்ன் சபைக்கு அறிவித்துள்ளார். அவரின் இந்த முடிவை சபை ஏற்றுக்கொள்கிறது. இப்போது புதிய டெஸ்ட் தலைவரை அடையாளம் கண்டு நியமிக்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன - என்றுள்ளது.



# பிபாவின் தலைவர் இலங்கை வந்தார்!

கொழும்பு, நவ. 20

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் (பிபா) தலைவர் ஜியோவன்னி இன்பன்டீனோ உத்தியோகபூர்வ பயணமாக நேற்று இலங்கை வந்தார். அவருடன் பிபாவின் ஐந்து அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ண சர்வதேச அழைப்பு உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் ஜியோவன்னி இன்பன்டீனோ விசேட அதிதியாக பங்கேற்றார்.

அத்துடன், நேற்று அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரை அநுராதபுரத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, அவர் இலங்கை தேசியக் கொடியாலான முகக் கவசம் பலரின் கவனத்தையும் ஈர்த்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிக் பாஷ் ரி-20 தொடரில் சதம் அடித்தார் மந்தனா

சிட்னி, நவ. 20

'பிக் பாஷ்' இருபது - 20 தொடரில் சதம் அடித்த முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை ஸ்மிருதி மந்தனா பெற்றுள்ளார்.



அவுஸ்திரேலியாவில் பெண்களுக்கான 'பிக் பாஷ்' கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில், இந்திய அணியின் 8 வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் சிட்னி தண்டர்ஸ், மெல்பர்ன் ரெனிகேட்ஸ் அணிகள் மோதின. முதலில் களமிறங்கிய மெல்பர்ன் அணி 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 175 ஓட்டங்கள் எடுத்தது. ஹர்மன் பிரீத் கவுர், 55 பந்தில் 81 ஓட்டங்களை விளாசினார்.

அடுத்து களமிறங்கிய சிட்னி அணிக்கு ஸ்மிருதி மந்தனா, 64 பந்துகளில் 114 ஓட்டங்கள் (14 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள்) குவித்த போதும் 20 ஓவரில் 171/2 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

ஹர்மன்பிரீத் கவுர், சிறந்த வீராங்கனை ஆனார். மந்தனா சாதனை நேற்று முன்தினம் 114 ஓட்டங்கள் எடுத்த மந்தனா, 'பிக் பாஷ்' தொடரில் சதம் அடித்த முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை பெற்றார். (ஐ)

# தாயகத்தில் பாகிஸ்தானிடம் வீழ்ந்தது பங்களாதேஷ் அணி

டாக்கா, நவ. 20

பங்களாதேஷ் அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது பாகிஸ்தான் அணி.

பங்களாதேஷ் சென்றுள்ள பாகிஸ்தான் அணி, 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரிலும், இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரிலும் விளையாடுகின்றது.

நேற்று டாக்காவில் நடந்த முதலவாவது இருபது - 20 போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்ற அந்த அணிக்கு அபிவ் ஹூசைன் 36, மஹடி ஹசன் 30 (ஆட்டமிழக்காமல்), நருல் ஹசன் 28 ஓட்டங் களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் ஹசன் அலி 3, முஹமட் வசீம் 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 6 விக்கெட்களை இழந்து 19.2 ஓவர்களில் 132 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில், பஹார் ஷமான் 34, குஷ்டில் ஷா 34 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். (ஐ)



# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைப்பதில் சிக்கல் ஏற்படாது

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை

கொழும்பு, நவ. 20

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைப்பதில் சிக்கல் ஏற்படாது என்றே தான் நம்புவதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்டக்குழுவொன்று இலங்கை வந்திருந்தது. என்னுடனும் பேச்சு நடத்தியிருந்தனர். இலங்கையால் நிறைவேற்றப்பட்டுள்ள நிபந்தனைகள், அவற்றின் சாதகத் தன்மை, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் பற்றி விவரிக்கப்பட்டது.

விரைவில் ஐரோப்பிய



ஒன்றியத்தின் தூதுவரையும் சந்திக்கவுள்ளேன். தலைமைகத்துக்கு முழுத் தகவல்களும் ஒப்படைக்கப்படும். எனவே, வரிச்சலுகையில் சிக்கல் வராது" - என்றார். (இ)



# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் சிக்கினர்!

நுவரெலியா, நவ. 20

நுவரெலியா மாவட்டம், காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர் ஏந்திச் செல்லும் பொகவந்தலாவ டின்சின் கெசல்கமுவ ஓயாவில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த மூன்று சந்தேகநபர்களைக் பொகவந்தலாவைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போதே குறித்த மூன்று சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம், மின்சாரத் துக்குத் தேவையான வயர் சுருள்கள் மற்றும் நீர் வெளியேற்றும் குழாய்கள் என்பனவும் கைபற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொகவந்தலாவை டின்சின், பொகவந்தலாவை தோட்டம், பொகவந்தலாவை கெம்பியன் ஆகிய தோட்டப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை எதிர்வரும் 23ஆம் திகதி ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பொலிஸாரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# தொற்றாளர் எண்ணிக்கை நான்கு சதவீதத்தால் உயர்வு

## பொது சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, நவ. 20

நாட்டில் ஒக்ரோபர் இறுதி வாரத்தின் பின்னர் நாளாந்தம் இனங்காணப்படும் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று பொது சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், திருவிழாக்கள் மற்றும் மரண சடங்குகள் என்பவற்றில் அளவுக்கதிகமான மக்கள் ஒன்றுகூடியமை மற்றும் இது போன்ற சந்தர்ப்பங்களில் சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றாமை என்பவையே இதற்கு காரணம் என்று என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

தொழில்சாலைகள் உள்ளிட்ட இடங்களில் முன்னெடுக்கப்பட்ட எழுமாற்று கோவிட் பரிசோதனைகள் தற்போது குறைக்கப்பட்டுள்ளன. முன்னரைப் போன்று பரிசோதனைகளின் அளவு அதிகரிக்கப்பட்டால் தொற்றாளர் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# சட்டவிரோத சிகரெட்டுகளுடன் இருவர் கைது!

வத்தளை, நவ. 20

வத்தளை - கல்யாணி வீதியில் சுமார் 5 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய சிகரெட்டுகளுடன் சந்தேகநபர்கள் இருவர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போதே குறித்த சிகரட் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பேருவளை மற்றும் கல்கிஸ்ஸை பிரதேசங்களில் வசிக்கும் 44 மற்றும் 46 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணம் மற்றும் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வீடு வீடாகத் திரியும் வவுனியா பொலிஸ்!

வவுனியா, நவ. 20

மாவீரர் வாரத்தை நினைவுகூருவதற்குப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு அமைய வவுனியா நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தடை உத்தரவுக் கட்டளையைக் உரியவர்களுக்கு வழங்குவதற்காகச் சரியான முகவரிகள் இன்றி வவுனியா பொலிஸார் வீடு வீடாகச் சென்று வருகின்றார்கள்.

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவுக்குள் 20.11.2021 தொடக்கம் 29.11.2021 வரை மாவீரர் நாளை நினைவுகூருவதற்கு வவுனியா தலைமையகப் பொலிஸாரால் வவுனியா நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரிய மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனை ஆராய்ந்த மன்று குறித்த நிகழ்வு தடை உத்தரவு பிறப்பித்துள்ளதுடன், பொலிஸாரால் பெயர் குறிப்பிடப்பட்ட 8 பேருக்கும் தடை உத்தரவுக் கட்டளையை வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் முன்னாள் அரசியல் கைதியான செல்வநாயகம் அரவிந்தன், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி கா.ஜெயவனிதா, காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் ப.சத்தியலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உப தலைவர் சி.கஜேந்திரகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கிய செயற்பாட்டாளர் சு.தவபாலன் ஆகியோருக்கு குறித்த தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதில் பெயர் குறிப்பிட்ட சிலரது முகவரிகள் தவறாகப் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளமையால் குறித்த நபர்களைத் தேடி வவுனியா பொலிஸார் வீடு வீடாகத் திரிந்து வருகின்றனர். பின்னர் தொலைபேசி அழைப்பெடுத்து அவர்கள் நிற்கும் இடங்களுக்குச் சென்று குறித்த தடை உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, குறித்த தடை உத்தரவில் தமது பெயர்கள் இருக்கின்றபோதும் முகவரிகள் பிழையாக உள்ளன எனவும், பொலிஸாரால் வழங்கப்பட்ட கட்டளையில் தமிழ் எழுத்துப் பிழைகள் அதிகமாக உள்ளன எனவும் தடை உத்தரவைப் பெற்றவர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

கொரோனாத் தொற்றால்

# மாணவ பிக்குகள் அதிகளவு பாதிப்பு

கொழும்பு, நவ. 20

ஆனமடுவை - பிரிவெனாவில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவ பிக்குகளின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளது எனச் சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஆனமடுவை, கொட்டுக்கச்சி வடத்த ஸ்ரீசரணங்கர பிரிவெனாவில் மேலும் 14 மாணவ பிக்குகளுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என ஆனமடுவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

வடத்த ஸ்ரீசரணங்கர பிரிவெனாவில் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவ பிக்குகளுக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

குறித்த பிரிவெனாவில் இம்மாதம் முதலாம் திகதி 18 மாணவ பிக்குகளுக்குக் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதுடன், கடந்த 10 ஆம் திகதி மீண்டும் 13 மாணவ பிக்குகளுக்குத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

இவ்வாறு கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவ பிக்குகளுக்கு தனித்தனியாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், மீண்டும் மூன்றாவது தடவையாக அங்கு கல்வி பயிலும் மாணவ பிக்குகளுக்கு அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 14 மாணவ பிக்குகளுக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என ஆனமடுவ சுகாதார வைத்திய அதிகாரி ரவி அபேரத்ன தெரிவித்துள்ளார்.

சுமார் 65 மாணவ பிக்குகள் தங்கியிருந்து கல்வி பயிலும் வடத்த ஸ்ரீசரணங்கர பிரிவெனாவில் 10 சிறுவர்களும் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# இரண்டாம் மாடியிலிருந்து தவறி வீழ்ந்த குடும்பஸ்தர்

## தப்பிக்க முயன்ற வர்த்தக நிலைய உரிமையாளர்

தலவாக்கலை, நவ. 20

தலவாக்கலை நகரிலுள்ள வர்த்தக நிலையத்தின் இரண்டாவது மாடியிலிருந்து 50 வயதான குடும்பஸ்தர் ஒருவர் நேற்று கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

அவரின் தலைப் பகுதி பலமாக அடிபட்டுள்ளது. சிகிச்சைகளுக்காக அவர் லிந்துலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த வர்த்தக நிலையத்தில் இரண்டாவது மாடியில் பாதுகாப்பு வேலி அமைக்கப்படாமையால் இந்த அனர்த்தம்



ஏற்பட்டுள்ளது என நகரவாசிகள் தெரிவிக்கின்றனர்.

வர்த்தக நிலைய உரிமையாளர், வர்த்தக நிலையத்தை மூடிவிட்டுத் தப்பிக்க முயன்ற போது அவ்விடத்தை பொது மக்கள் முற்றுகையிட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (இ)

## ஆயர் மன்றம்...

நவம்பர் மூன்றாவது சனிக்கிழமை போரில் கொல்லப்பட்டோரை நினைவு கூருமாறு வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம் விடுத்த அழைப்பு பெரும் சர்ச்சையானது. இந்த நிலையில், நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள் வடக்கு - கிழக்கு அமைப்பு நேற்று ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அருட்பணி. சா. ம. செல்வரட்ணம் அ. ம. தி., அருட்பணி. றோகான் டோமினிக் சி. எம். எவ், அருட்பணி. அ. தேவதாசன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு,

அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் கத்தோலிக்க மக்களின் கிறிஸ்தவ வாழ்வை பண்பாட்டு மயமாக்கி அதற்கான செயல்பாடுகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்துவதையும், ஒட்டுமொத்த ஈழத்தமிழ் மக்களின் கூட்டுரிமைகளுக்காக குரல் கொடுப்பதையும், இலங்கை தீவில் நீதியில் அடித்தளமிடப்பட்ட அமைதியை நிலைநாட்டுவதற்காக உழைப்பதையும் நோக்காகக் கொண்டு செயல்படுகின்றது.

இந்த நிலையில், அண்மையில் அவர்களால் வெளியிடப்பட்ட 'போரில் இறந்த அனைவரையும்' நினைவு கூர்ந்து இறை வேண்டல் செய்வதற்கான அழைப்பு தமிழ் தேசியத் தரப்பில்பல எதிர்ப்பலைகளை உருவாக்கியிருப்பதை அவதானித்து நாம் மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

ஆகவே ஈழத்தமிழ் மக்களின் விடிவுக்கான கத்தோலிக்க திரு அவையின் தொடர் அர்ப்பணத்தை உறுதி செய்ய பின்வரும் கருத்துக்களை முன்வைக்கிறோம்.

நவம்பர் மாதம் இறந்த அனைவரையும் இறை வேண்டல் செய்யும் மாதமாக உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்களால் காலம்காலமாக அனுசரிக்கப்படுகின்றது. கல்லறைகளை தரிசிக்கவும், இறந்தோருக்காக வழிபாடு மேற்கொள்வதையும் கிறிஸ்தவ மக்கள் தமது கடமையாக கருதுகின்றனர். இத்தகைய நீண்ட மரபின் ஒரு பகுதியாகவே நாம் வடக்கு-கிழக்கு ஆயர் மன்றத்தின் வேண்டுகோளை பார்க்கின்றோம். அதற்கு அப்பால் இதற்கு எந்தவித அரசியல் பரிமாணமும் இல்லை என்பதே எமது நிலைப்பாடு.

நவம்பர் மூன்றாவது சனிக்கிழமையில் போரில் இறந்த அனைவருக்காகவும் செபிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறதே தவிர நவம்பர் 20 அல்ல. இது அடுத்தடுத்த ஆண்டுகளின் திகதிகளில் மாறுபடும்.

மே 18ஐ இதே ஆயர் ன்றம் ஈழத் தமிழ் இனப்படுகொலை நாளென பிரகடனப்படுத்தி நினைவுகூர கடந்த மே மாதத்தில் அழைப்பு விட்டிருந்ததையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறோம். ஆகவே போரில் இறந்த அனைவருக்காகவும் இறை வேண்டல் செய்வது என்பது தமிழர் நெஞ்சங்களில் வாழும் மாவீரர்களையும், இன அழிப்புக்குள்ளான தமிழ்மக்களின் தியாகங்களையும் சமரசம் செய்வதாகாது. ஏற்கனவே தமிழ் மக்கள் நினைவு கூருகின்ற நாட்களில் அவர்களை நினைவு கூர்வது வரலாற்றுக் கட்டாயம்.

தமிழ்த் தேசியப் பரப்பு மத வரையறைகளை கடந்து ஈழத் தமிழ்மக்களை ஈழத் தமிழ் தன்மையில் ஒருங்கிணைக்கின்றது. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமது தமிழ்த் தேசிய ஒற்றுமையை குலைக்க முயலும் ஆபத்து பற்றியும் நாம் அனைவரும் விழிப்பாயிருக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் அண்மையில் அதிகரித்துவரும் மத முரண்பாடுகள் குறித்து விரைந்து செயல்பட்டு நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து பேண நாம் முன்வரவேண்டும்.

எதிர்காலத்தில் இத்தகைய தவறான புரிதல்களை தவிர்க்கும் முகமாக வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம், தமிழ்த் தேசியம் சார் விடயங்களில் வடக்கு, கிழக்கிலுள்ள ஏனைய சமயத் தலைவர்களோடும், சிவில் சமூக அமைப்புக்களோடும் நெருக்கமான ஒத்துழைப்பை தொடர்ந்து பேணும் என எதிர்பார்க்கின்றோம்.

ஈழத்தமிழர்களின் கூட்டு நினைவுகூர் தல் என்பது தமிழ்த் தேசகட்டுமானத்தின் பிரிக்க முடியாத அங்கமாக உள்ளது என்பதை நினைவூட்டி, ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான எமது தொடர் அர்ப்பணத்தையும் அனைத்துத் தரப்புக்கும் மீண்டுமொருமுறை உறுதி செய்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## நினைவு கூரும்...

என்றால் எமது மக்கள் அந்த நாளில் நினைவு கூர்ந்து ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து தமது துயர் குறைய அழுது விட்டு அமைதியடைந்து விடுவார்கள்" என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யுமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இந்த மாதம் கார்த்திகை மாதம் என்பதனால் நீதிமன்ற தடை உத்தரவுகளை வீடு வீடாக சென்று ஒவ்வொருவருக்கும் பொலிஸார் கொடுத்து வருகின்றனர். எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அது கொடுக்கப்பட்டுள்ளது. போர் மௌனித்துவிட்டது. போரில் தனது இனம், மண்ணுக்காக மரணித்தவர்களை நினைவு கூருவதற்கான வாய்ப்புக்களை இன்று இந்த அரசு தடுக்கின்றது.

இவ்வாறு தடுப்பதன் மூலம் எதனை நீங்கள் சாதிக்கபோகின்றீர்கள்? இதனை நீங்கள் சாதாரணமாகவிட்டீர்கள் என்றால் எமது மக்கள் அந்த நாளில் நினைவு கூர்ந்து ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பார்கள். தமது துயர் குறைய அழுது விட்டு அமைதியடைந்து விடுவார்கள். ஆனால் நீங்கள் தடுக்கத்தடுக்க எமது மக்கள் இன்னும் வீறுகொண்டு எழுவார்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒரு பேச்சின் மூலமாக, எழுத்தின் மூலமாக கண்டுவிடலாம் என நீங்கள் நினைக்கக் கூடாது. இந்த நாட்டில் உள்ள அத்தனை இனமும் சுதந்திரமாக வாழ்கின்ற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

கார்த்திகை விளக்கு என்பது இந்து மதத்தவர்களின் பாரம்பரியம். அதற்கு கூட தடை விதிக்கப்பட்டது. ஆகவே இந்த விடயத்தில் அரசு தனது தடை உத்தரவுகள் வழங்குவதனை நிறுத்த வேண்டும். நீங்கள் நினைப்பதுபோல் செயற்பட நினைப்பீர்களேயானால் இந்த நாட்டில் ஒருபோதுமே உங்களால் இனப்பிரச்னையை தீர்க்க முடியாது - என்றார்.

## கூட்டமைப்பு...

தயாரிக்கும் போது தமிழ் தேசிய கூட்டமைப்பினர், ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோரையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் 5 ஆம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு எவரும் வெளி இனத்தவர் அல்ல, தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அனைவரும் ஒரு நாட்டவர். இலங்கையரே இதன்படி நாடாக நாம் பயணிக்க வேண்டும் என்றால், நாட்டுக்கு பொருத்தமான அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும்.

ஆகவே இலங்கையர் என்ற உணர்வுடன் சிந்திக்க வேண்டும். இந்த விடயத்தில் எமது கடமையை நிறைவேற்றுவோம். தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டும், ஜே.வி.பியையும் இணைத்துக்கொள்ள வேண்டும். இந்த அரசியல் வெற்றிடத்தில் ஜே.விபிக்கு அதிக வாய்ப்புகள் உருவாகி வருகின்றது. அதனையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

## ஒற்றையாட்சி...

முன்னோக்கி பயணிக்க முடியாது" என எச்சரித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "ஒற்றையாட்சி சிந்தனை தொடர்ந்தால் நாடு பூச்சியமாகவே மாறும்" எனவும் எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டிய அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கை ஒற்றையாட்சி, சிங்கள பௌத்த நாடு என்ற சிந்தனையில், ஏனைய இனத்தவரை எதிரியாக கருதும் மனநிலையில் ஆட்சியாளர்கள் இனியும் பயணிப்பார்களானால் ஒருபோதும் இலங்கை நாடாக மீள முடியாது. இதே வேளை யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது என்பதற்காக வடக்கு, கிழக்கு பகுதிகளை கைவிட முடியாது. இந்த நாட்டில் ஏனைய பகுதிகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை வடக்கு, கிழக்கிற்கும் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக ஏனைய மாகாணங்களை விடவும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகம் கொடுக்க வேண்டும். 35 ஆண்டுகள் பின் தள்ளப்பட்ட நிலையிலே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளன. யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது என்பதற்காக வடக்கு, கிழக்கு பகுதிகளை நீங்கள் கைவிட முடியாது. சமமாக சகல பகுதிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இப்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவு திட்டத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை அரசு கைவிடும் நிலைமையே உள்ளது. அத்துடன், திட்டமிட்ட வகையில் வடக்கின் இன பரம்பலை மாற்றியமைக்கும் சூழ்ச்சியையும் அது முன்னெடுத்துள்ளது. இதை சுட்டிக்காட்டினால் எம்மை இனவாதிகள் என்கிறது - என்றார்.

## எதிர்க்கட்சி...

னையொன்றை முன்வைத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு வலியுறுத்தினார்.

அதன்போது அமைச்சர் குறிப்பிடுகையில்,

"இந்த சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முகக் கவசம் அணியாது செயற்படுகின்றனர். சஜித்தின் முட்டாள் அலையால் தொற்று உறுதியாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தற்போது மனோ கணேசனுக்கு தொற்று உறுதியாகியுள்ளதால் இவர்களுக்கும் தொற்று ஏற்படலாம். இதனால் பாதுகாப்புக்காக அவர்களை பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றார்.

இவ்வேளையில் சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறுகையில், "சபையில் இருக்கும் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் சுகாதார ஒழுங்குவிதிகளை பின்பற்றினால் அது மக்களுக்கு முன்மாதிரியாக அமையும்." என்றார்.

## மாவீரர் நாளை...

வேந்தல் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், யாழ்ப்பாணத்தில் 12 பேருக்கும், கிளிநொச்சியில் 51 பேருக்கும் நினைவேந்தலை மேற்கொள்ள தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவீரர்களை நினைவேந்தும் வாரம் நாளை ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே இந்தத் தடை உத்தரவுகள் பெறப்படுகின்றன.

**யாழ்ப்பாணம்**

யாழ். பல்கலைக்கழகம், கோப்பாய் 512ஆவது படைப்பிரிவு தலைமையகம் முன்பாக (கோப்பாயில் முன்னர் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடம்) மாவீரர் நாளை அனுஷ்டிக்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கோப்பாய் பொலிஸாரால் கோரப்பட்டது.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் வி. ரி. சிவலிங்கம், நாளை தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி வரை நினைவேந்தல்களை இந்தப் பகுதிகளில் மேற்கொள்ள தடை விதித்துள்ளார். அத்துடன், யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய 12 பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

**மல்லாகம்**

இதேபோன்று, மாவீரர் நினைவேந்தலை மேற்கொள்ள தடை விதிக்குமாறு சுன்னாகம் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கின் பிரதிவாதிகள் மூவரை மன்றில் முன்னிலையாகுமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன், சுன்னாகம் பிரதேசசபை உறுப்பினர்களான சுரேஷ்குமார், சிவகுமார் லகிந்தன் ஆகியோரையே எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியின் சகல பொலிஸ் நிலையங்களின் கோரிக்கைக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் உள்ளிட்ட 51 பேருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவுகளை வழங்கியுள்ளது. (ஐ-3)

## யாழ். நகர....

தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்றைய தினம் பாடசாலை இடம்பெறவுள்ள நிலையில் இது குறித்து மாணவர்களுக்கு எந்த அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (ஐ)

## மற்றுமொரு...

பிரிவின் பேராசிரியர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ ருவிட்டர் தளத்தில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் பீ.1.617.2.28 என்ற டெல்டா உப வைரஸ் திரிபு நாட்டில் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் தற்போது பீ.1.617.2.104 என்ற டெல்டா உப வைரஸ் திரிபான டெல்டா உப பரம்பரை வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் அந்தப் பதிவில் கூறியுள்ளார்.

இந்த புதிய திரிபு அதிக வீரியமிக்கதாக இருக்கலாம் என்றும் சந்திம ஜீவந்தர கூறியுள்ளார். (அ)

## லண்டன் தீ...

அவர்களின் பாட்டி ஆகியோரே உயரிழந்தனர்.

பெக்ஸ்லிஹீத் பகுதியில் இலங்கை தமிழர்கள் அதிகளவில் வாழும் ஹமில்டன் பகுதியிலேயே இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

முதல் மாடியிலேயே தீ விபத்து ஏற்பட்டது. தீயை அணைக்க 40 தீயணைப்பு வீரர்கள் முயற்சித்தனர். ஆனால், அவர்களால் நால்வரையும் உயிருடன் மீட்க முடியவில்லை. உயிரிழந்த இளம் தாயின் சகோதரன் உயிர் தப்புவதற்காக மாடியிலிருந்து குதித்ததில் கால்கள் இரண்டும் முறிவடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குழந்தைகள் இருவரும் படுக்கையில் கிடந்த நிலையிலேயே தீயில் கருகி உயிரிழந்தனர். அவர்களின் பேர்த்தியார் இன்றைய தினம் இலங்கை வரவிருந்தார். அதற்காக பொதிகளை தயார் செய்துகொண்டிருந்தபோதே நெருப்பு பரவியதாகக் கூறப்படுகின்றது. ஆனால், தீ பரவல் எப்படி ஏற்பட்டது என்பது தொடர்பில் தெரியவரவில்லை.

இந்த சம்பவம் லண்டனில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அப்பகுதி மக்கள் உயிரிழந்தவர்களுக்கு வீட்டின் அருகே, மலர்கள், விளையாட்டு பொம்மைகளை வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

(முன்னர் வந்த செய்தி 12ஆம் பக்கத்தில்)

ஈழநாடு
Eelanadu

# வவுனியா வடக்கு பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிப்பு

## ஆதரவு 7; எதிர்ப்பு 15

வவுனியா, நவ. 20

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான பாதீடு தோல்வியடைந்துள்ளது.**

வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான பாதீடு தவிசாளர் சு.தணிகாலசத்தால் சபையில் நேற்று முன்வைக்கப்பட்டது. இதையடுத்து பாதீடு தொடர்பில் உறுப்பினர்களின் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து பாதீடு சபையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது 26 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்கள் மட்டும் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 4 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஈ.பி.



ஆர்.எல்.எவ். கட்சியின் 3 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் 3 உறுப்பினர்களும், சுயேச்சைச் குழுவின் ஒரு உறுப்பினரும் என 15 பேர் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தனர். இதனால் மேலதிக 8 வாக்குகளால் பாதீடு தோல்வியடைந்தது.

வாக்கெடுப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினர் நடுநிலைமை வகித்ததுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினர் வீதம் மூவர் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.(இ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல்





யாழ்ப்பாணம்,நவ.20

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.கோண்டாவில் மேற்கு (ஜே/116) கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 28 குடும்பங்களுக்கு பூமணி அம்மா அறக்கட்டளை நிறுவனத்தால் 1,500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

லயன் கலாநிதி நா. தனேந்திரன் பூமணி அறக்கட்டளையின் தலைவர் லயன் கலாநிதி நா. தனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க. விந்தன், செயற்பாட்டாளர் இ. மயில்வாகனம், கிராமசேவகர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பொம்மைவெளியில் ஹெரோயினுடன் பெண்ணொருவர் வசமாக மாட்டினார்!

யாழ்ப்பாணம், நவ. 20

பொம்மைவெளியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் பிரதான சந்தேகநபரான பெண் ஒருவர் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் போதைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொம்மைபெளிப் பகுதியில் நீண்டகாலமாகப் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தார் எனக் கூறப்படும் பிரதான சந்தேகநபரான 38 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் போதைத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் குறித்த பெண் நேற்றுமுன்தினம் இரவு சுற்றிவளைக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 2.40 கிராம் ஹெரோயின் பொலிஸாரால் மீட்கப்பட்டது. குறித்த பெண் பல போதைப்பொருள் வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவர் என்பதுடன் ஏற்கனவே மேல் நீதிமன்ற வழக்கில் மேல் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டவர் என்பதுடன் பிணையில் உள்ள நிலையிலும் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றார் எனக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மேற்படி பொலிஸ் குழுவினரால் யாழில் பிரதான போதைப்பொருள் சூத்திரதாரிகள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(இ - 03)

# மேலும் 351 பேர் குணமடைவு

கொழும்பு, நவ. 20

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 351 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 25 ஆயிரத்து 911 ஆக அதிகரித்துள்ளது. (இ)

# பல்கலைக்கு தகுதி பெற்ற மாணவர்களை பதிவுசெய்யும் நடவடிக்கை டிசெம்பரில் ஆரம்பம்



கொழும்பு, நவ. 20

2020ஆம் கல்வியாண்டுக்கான வெட்டுப்புள்ளி களுக்கு அமைவாக பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி பெற்ற மாணவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கான வெட்டுப்புள்ளிகளை வெளியிடும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

இதற்கமைய, ஒவ்வொரு மாணவரும் தான் தெரிவாகியுள்ள பல்கலைக்கழகம் மற்றும் பாடநெறிகள் தொடர்பில் அறிந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனையடுத்து, அவர்களைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யும் நடவடிக்கையே முன்னெடுக்க வேண்டியுள்ளதாகவும் பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார்.

இதேவேளை, பல்வேறு பீடங்களையும் டிசெம்பர் மாதம் மற்றும் ஜனவரி மாதத்தின் முதற்பகுதியில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இம்முறை பல்கலைக்கழகத்திற்கு 41 ஆயிரத்துக்கும் இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- சிவா
4.30 மணி : DP EDUCATION




5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-தற்கால பொருளாதாரா நிலைக்கு காரணம்?



7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
7.30 மணி: மனிதனின் மறுபக்கம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : நெற்றிக்கண்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு